In Public domain. Digitization Muthulakshmi Research Academy

உ
சிவமயம்

# திருஞானசம்பந்தர் தேவாரம்
# திருமுறை திரட்டு

தொகுப்பு: Dr. ச. ரவிசங்கர்

"சிவா திருச்சிற்றம்பலம்"

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

# திருமுறை ஆசிரியர்கள்

| | | |
|---|---|---|
| திருஞானசம்பந்தர் | - முதலாம் திருமுறை<br>- இரண்டாம் திருமுறை<br>- மூன்றாம் திருமுறை | தேவாரம் |
| திருநாவுக்கரசர் | - நான்காம் திருமுறை<br>- ஐந்தாம் திருமுறை<br>- ஆறாம் திருமுறை | தேவாரம் |
| சுந்தரர் | - ஏழாம் திருமுறை | தேவாரம் |
| மாணிக்கவாசகர் | - எட்டாம் திருமுறை | திருவாசகம்<br>திருக்கோவையார் |
| திருமாளிகைத் தேவர் உள்பட ஒன்பதுபேர் | - ஒன்பதாம் திருமுறை | திருவிசைப்பா<br>திருபல்லாண்டு |
| திருமூலர் | - பத்தாம் திருமுறை | திருமந்திரம் |
| காரைக்கால் அம்மையார் உள்பட பன்னிருவர் பாடிய பாடல்கள் | - பதினொன்றாம் திருமுறை | தொகுப்பு |
| சேக்கீழார் | - பன்னிரண்டாம் திருமுறை | திருத்தொண்டர் புராணம் (பெரிய புராணம்) |

அருநெறிய மறை வல்லமுனியகன்
பொய்கை அலர்மேய
பெருநெறியபிர மாபுரமேவிய
பெம்மான் இவன் றன்னை
ஒரு நெறிய மனம் வைத்துணர்ஞானசம்
பந்தன் உரைசெய்த
திருநெறிய தமிழ் வல்லவர் தொல்வினை
தீர்தல் எளிதாமே

- திருஞானசம்பந்தர்.

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

C.S.S.

உ
சிவமயம்

# திருஞானசம்பந்தர் தேவாரம்
# திருமுறை திரட்டு

தொகுப்பு : டாக்டர். ச. ரவிசங்கர்

திரு. மு. அருணாசலம் அவர்கள்
புதுமனை புகுவிழா வெளியீட்டு மலர்.

22.11.2001

பாண்டிச்சேரி

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

# திருஞானசம்பந்தர் தேவாரம் திருமுறை திரட்டு


| | | பக்கம் |
|---|---|---|
| 1. | நால்வர் துதி | 3 |
| 2. | குருமரபு வாழ்த்து | 4 |
| 3. | ஆசியுரை | 5 |
| 4. | முன்னுரை | 6 |
| 5. | நேர்முகப் பயிற்சி மையம் | 8 |
| 6. | வெளியீட்டார் வேண்டுகோள் | 10 |
| 7. | திருமுறை படனம் ஏன்? எப்படி? | 12 |
| 8. | ஈசன் போற்றி | 19 |
| 9. | முதலாம் திருமறை | |
| | அ) திருப்பிரமபுரம் | 20 |
| | ஆ) திருவண்ணாமலை | 25 |
| | இ) திருக்கோலக்கா | 30 |
| | ஈ) திருவிடைமருதூர் | 33 |
| | உ) திருவாரூர் | 36 |
| | ஊ) திருவீழிமிழலை | 38 |
| 10. | இரண்டாம் திருமுறை | |
| | அ) திருப்புளிருக்குவேளூர் | 41 |
| | ஆ) கோளாறு திருப்பதிகம் | 46 |
| | இ) திருஆலவாய் | 52 |
| 11. | மூன்றாம் திருமுறை | |
| | அ) திருவாவடுதுறை | 56 |
| | ஆ) பஞ்சாக்கரத் திருப்பதிகம் | 62 |
| | இ) நமச்சிவாயத் திருப்பதிகம் | 65 |

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

உ

சிவமயம்

## நால்வர் துதி

பூழியர்கோன் வெப்பொழித்த
புகலியர்கோன் கழல்போற்றி
ஆழிமிசைக் கன்மிதப்பில்
அணைந்தபிராண் அடிபோற்றி
வாழிதிரு நாவலூர்
வன்றொண்டர் பதம் போற்றி
ஊழிமலி திருவாத
வூரர்திருத் தாள்போற்றி

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

உ

சிவமயம்

# குருமரபு வாழ்த்து

திருக்கயிலாய பரம்பரைத் திருவாவடுதுறை ஆதீனம்

குருமுதல்வர்

## அருள்திரு நமசிவாய மூர்த்திகள்

கயிலாய பரம்பரையிற் சிவஞான
போதநெறி காட்டும் வெண்ணெய்
பயில் வாய்மை மெய்கண்டான் சந்ததிக்கோர்
மெய்ஞ்ஞான பானு வாகிக்
குயிலாரும் பொழிற்றிருவா வடுதுறை வாழ்
குரு நமச்சி வாய தேவன்
சயிலாதி மரபுடையோன் திருமரபு
நீடூழி தழைக மாதோ

- ஸ்ரீ மாதவச் சிவஞான முனிவர்

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

உ
சிவமயம்
திருச்சிற்றம்பலம்

திருக்கயிலாய பரம்பரைத்
திருவாவடுதுறை ஆதீனம்
23-ஆவது குரு மகாசந்நிதானம்
சீர்வளர் சீர் சிவப்பிரகாச தேசிக
பரமாசாரிய சுவாமிகள் அவர்கள்

திருவாவடுதுறை - 609 803.
(நாகை மாவட்டம்)
☎ : 04364-32021
நாள் : 10.11.2001

"நமச்சிவாய வாஅழ்க நாதன்தாள் வாழ்க
இமைப்பொழுதும் என்நெஞ்சில் நீங்காதான் தாள்வாழ்க
கோகழி ஆண்ட குருமணிதன் தாள்வாழ்க
ஆகமம் ஆகிநின்று அண்ணிப்பான் தாள்வாழ்க
ஏகன் அனேகன் இறைவன் அடிவாழ்க"

# "ஆசியுரை"

22.11.2001 அன்று நடைபெறும் தங்கள் "புதுமனை புகுவிழா" நினைவாக திருஞானசம்பந்தர் தேவாரத்திரட்டு 12 பதிகங்களுக்கு விளக்க உரையுடன் வெளியிட இருப்பது அறிந்து மகிழ்கின்றோம். இவ்வெளியீட்டு விழாவும், "புதுமனை புகுவிழாவும்" சிறப்பாக நடைபெறவும், விழாவிற்கு வருகைதரும் அனைவரும் எல்லா நலன்களும் பெற்று நீடுவாழவும் நமது ஆன்மார்த்த மூர்த்தியாகிய அருள்மிகு ஞான மாநடராசப் பெருமானின் திருவடி மலர்களைச் சிந்தித்து வாழ்த்துகின்றோம்.

இத்துடன் திருநீற்றுத் திருக்காப்பும் அனுப்பியிருக்கிறோம். அனைவரும் அணிந்து மகிழ்க!

"பண்ணின் நேர் மொழியாள் உமைபங்கரோ!
மண்ணினார் வலம்செய்ம் மறைக்காடரோ!
கண்ணினால் உமைக் காணக் கதவினைத்
திண்ணம்ஆகத் திறந்து அருள்செய்ம்மினே!

(திருநாவுக்கரசு தேவாரம்)

பெறுநர் :
திரு. மு. அருணாசலம்
67, மூன்றாவது குறுக்கு வீதி, ஸ்ரீ முகாம்பிகை நகர்,
ரெட்டியார்பாளையம், பாண்டிச்சேரி – 605 010

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

உ
சிவமயம்

# முன்னுரை

"அண்ணாமலை எம் அண்ணா போற்றி!
கண்ணார் அமுதக் கடலே போற்றி!"

எனது தந்தையார், கரியமாணிக்கம் திரு.முத்துராம் ரெட்டியார், அவர்களின் தவறாத சிவபக்தியின் காரணமாக எனது சிறுவயதில் இருந்தே வாரம் தவறாது நெட்டப்பாக்கத்தில் உள்ள இராமலிங்கேஸ்வரரை வழிபட்டு வந்துள்ளேன்.

திருவண்ணாமலையில் உள்ளது ஈசான்ய மடம். அங்குள்ள சில சாதுக்கள் வருடம்தோறும் எமது இல்லத்தில் சிலகாலம் தங்கிச் செல்வர். அடியார்களிடம் மிகவும் அன்பும், பக்தியும் கொண்டு இருப்பார் எனது தந்தை. இத்தகைய பழக்கங்களினால் தான் எங்கள் குடும்பத்தில் உள்ள அனைவரும் என்றும் சிவவழிபாட்டில் ஒருமனதுடன் ஈடுபட்டு வருகிறோம்.

இத்தருணத்தில் திருவாவடுதுறை ஆதீனம் சைவ சித்தாந்த நேர்முகப் பயிற்சிமையத்தின் மூன்றாவது தொகுப்பில் நானும் எனது சகோதரரும் மாணவர்களாக சேர்ந்து "சித்தாந்த ரத்தினம்" என்னும் பட்டத்தினை திருவாவடுதுறை ஆதீனத்தில் 23வது பட்டத்தில் எழுந்தருளியுள்ள சீர்வளர்சீர் குருமகா சன்னிதானம் அவர்களின் பொற்கரங்களால் பெற்றோம்.

முன்வினைத் துன்பங்களில் இருந்து அனைவரும் முழுமையாக விடுபடுவதற்கும், பகுத்தறிவுக்கு ஏற்ற வழிமுறைகளையும் "சைவ சித்தாந்தம்" பயிற்சி அளித்து பயனடையச் செய்கின்றது. இதன் பயனாக நமது வாழ்வில் ஏற்படும் இன்ப துன்பங்களை சமமாக பாவித்து அமைதியுடனும் அறிவுத்தெளிவுடனும் எதிர்கொள்ள முடிகிறது. இப்பயிற்சியின் நான்காவது தொகுப்பில் எனது குடும்பத்தாரையும் மற்றும் நண்பர்கள் சிலரையும் சேர்த்து பயனடையச் செய்துள்ளேன்.

இத்தகைய மேன்மை வாய்ந்த சைவசித்தாந்த பயிற்சியினை நாம் அனைவரும் கற்று உய்வதற்கான வாய்ப்பினை அளித்த நமது திருக்கயிலாய பரம்பரைத் திருவாவடுதுறை ஆதீனம் 23வது குருமகாசன்னிதானம் சீர்வளர்சீர் சிவப்பிரகாச தேசிக பரமாசார்ய சுவாமிகள் திருவடிகளுக்கு எனது நன்றிகலந்த வணக்கங்கள்.

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

சைவசிந்தாந்தம் நாம் அனைவரும் எளிதில் உணரும் பொருட்டு இப்பயிற்சி மைய இயக்குனர் "சித்தாந்த வித்யாசாகரம்" "செந்நெறிசெல்வர்" "மெய்ஞானவள்ளல்" திரு. கு. வைத்தியநாத ஈசான தேசிகர் அவர்களின் சீரிய வழிகாட்டுதல் நமக்கு பேருஉதவி புரிந்துள்ளது. சுமார் 5000க்கும் மேற்பட்ட மாணவர்கள், தமிழ்நாடு மற்றும் மலேசியாவில் இப்பயிற்சி மையத்தில் பயில்கிறார்கள்.

தனது 71 அகவையிலும் மனம், உடல் தளர்வின்றி இளைஞனாகி 21வது நூற்றாண்டின் சைவ, சமய, விவேகானந்தராக நம்மிடையே வாழ்ந்து வரும் நமது வித்யாகுரு அவர்களுக்கு எனது நன்றியை காணிக்கையாக்குகிறேன்.

மேலும் எனது புதுமனை புகுவிழா அன்று திருஞானசம்பந்தரின் தேவாரதொகுப்பு 12 திருப்பதிகங்கள் பொருட்செறிவுடன் மலராக வெளியாகின்றது. மலருக்கு ஆசி உரை வழங்கிய திருக்கயிலாய பரம்பரை திருவாவடுதுறை ஆதீனம் 23வது குருமகாசன்னிதானம் சீர்வளர்சீர் சிவப்பிரகாசத் தேசிக பரமாச்சார்ய சுவாமிகள் அவர்களின் பொற்பாதங்களை வணங்கி எனது நன்றியினை காணிக்கையாக்குகின்றேன்.

*மு. அருணாசலம்*

67, மூன்றாவது குறுக்கு வீதி, ஸ்ரீ முகாம்பிகை நகர்,
ரெட்டியார்பாளையம், பாண்டிச்சேரி – 605 010



In Public domain. Digitization Muthulakshmi Research Academy

உ

சிவமயம்

# திருவாவடுதுறை ஆதீன சைவசித்தாந்த நேர்முகப் பயிற்சி மையம்,

## திருவிடைமருதூர் - 612 104

திருக்கயிலாய பரம்பரைத் திருவாவடுதுறை ஆதீனத்தில், 23–ஆவது பட்டத்தில் எழுந்தருளிச் சிவஞானச் செங்கோல் ஒச்சிவரும் சீர்வளர்சீர் குரு மகாசந்நிதானம் அவர்கள், சைவ சித்தாந்தம் பயில்வதற்கு ஆர்வம் உடைய அனைவருக்கும் சைவ சித்தாந்தத்தில் முழுமையான நேர்முகப் பயிற்சியை வழங்குவதற்கு அருள்பாலித்துள்ளார்கள்.

அவர்கள் அருளாணையின் வண்ணம், இப்பயிற்சி மையம் 1992–இல் தொடங்கப் பெற்று இப்பயிற்சி மைய இயக்குனர் திரு. கு. வைத்தியநாத ஈசான தேசிகர் அவர்களின் சீரிய வழிகாட்டுதலுடன் நடைபெற்று வருகிறது. இஃது ஒரு மூன்றாண்டு பயிற்சித் தொகுப்பு ஆகும். கடந்த மூன்று தொகுப்புகளில் 5050 மாணவர்கள் இப்பயிற்சி பெற்றுள்ளனர்.

இப்பயிற்சி மையத்தில் பட்டதாரிகளும், மருத்துவர்களும், வழக்கறிஞர்களும், பொறியாளர்களும், பேராசிரியர்களும், உயர் பதவியில் உள்ளவர்களும், மகளிரும் பயின்று பயன் பெற்றுள்ளனர்.

சீர்வளர்சீர் குரு மகாசந்நிதானம் அவர்கள் அருளாணையின் வண்ணம், இப்பயிற்சி மையத்தில் பயிலும் மாணவர்களுக்கு 2642 பக்கங்கள் கொண்ட 25 நூல்கள் வழங்கப்படுகின்றன. எல்லா நூல்களும் தற்காலத் தமிழ் நடையில் எழுதப் பெற்றவை. இவற்றை வேறு எங்கும் பெற இயலாது. இவை விற்பனைக்கல்ல.

தமிழ் மொழியில் எழுதப் படிக்கத் தெரிந்த ஆண், பெண் அனைவரும் இந்தப் பயிற்சியில் சேரலாம். கல்வித் தகுதியோ, வயது வரம்போ கிடையாது. சாதி, மத, இன வேறுபாடு இன்றி, எவரும் இதில் சேர்ந்து பயிலலாம்.

**சைவ சித்தாந்தப் பயிற்சியின் பயன்**

வாழ்க்கையில் ஏற்படும் ஒவ்வொரு சிக்கலுக்கும் ஒரு காரணம் இருக்க வேண்டும். அதன் காரணத்தை ஆராய்ந்து, (1) அந்தச் சிக்கலை எளிதில் தீர்க்கும் வழி முறைகளை இப்பயிற்சி உங்களுக்குக் கற்றுத் தருகிறது. (2) எதிர்பாராமல் ஏற்படும் மன உளைச்சல் (Tension) இப்பயிற்சியினால் அறவே நீங்கிவிடும். (3) வாழ்வில் ஏற்படும் எந்தச் சூழ்நிலையையும் அமைதியுடன் எதிர்நோக்கும் அறிவுத் தெளிவை இப்பயிற்சி உங்களுக்கு வழங்குகிறது. (4) இம் மையத்தில் பயின்றவர்கள் போலி மதவாதிகளிடமோ, போலிச் சோதிடர்களிடமோ

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

செல்வதில்லை. அதனால் நீங்கள் கடினமாக உழைத்துச் சம்பாதித்த பொருளும், உங்கள் பொன்னான நேரமும் வீணாவதில்லை. (5) ஊழ்வினைத் துன்பத்திலிருந்து நீங்கள் முழுமையாக விடுபடுவதற்கும், பகுத்தறிவுக்கு ஏற்ற வழிமுறைகளை இப்பயிற்சி தங்களுக்குக் கற்றுத் தருகிறது.

சமயத்துறையில் பல்வேறு வகையான கருத்துக் குழப்பங்கள் உள்ளன. அவற்றுள் சில வருமாறு:–

(1) கடவுள் உண்டு என்பதைப் பகுத்தறிவு வாதிகளும் மறுக்க முடியாதபடி எப்படி விளக்குவது? (2) பிற மதங்களில் கடவுள் ஒருவரே என்று கூறி இருக்கும்போழுது, இந்து மதத்தில் மட்டும் பல கடவுள்கள் எப்படி ஏற்பட்டன? (3) இந்து மதத்தில் உள்ள புராணச் செய்திகளைப் பகுத்தறிவுக்கு ஏற்ப எப்படிப் புரிந்து கொள்வது? (4) மறு பிறப்பு உண்டா? உண்டு என்றால், முற்பிறப்பில் நடந்தவைகளை நாம் அறியாமல் இருப்பதற்கு காரணம் என்ன? (5) எல்லாம் அவன் செயல் என்கிறார்கள். அப்படியானால் இறைவன் எல்லோரையும் ஏன் நல்லவராகப் படைக்க வில்லை? (6) கடவுள் இருந்தால் இருந்துவிட்டுப் போகட்டுமே, அவரை நாம் ஏன் வழிபட வேண்டும்? கோயிலுக்குப் போகவேண்டுவது அவசியமா? (7) இறை வழிபாட்டினாலும் விதியை வெல்ல முடியாது, அதை அனுபவித்துத்தான் தொலைக்க வேண்டும் என்று கூறுகிறார்களே, அப்படியானால் இறைவழிபாடு எதற்கு? என்பன போன்ற பல வினாக்கள் நம் மனத்தில் எழுகின்றன. ஆயினும், இவற்றிக்கு விடை காணாமலே நமது வாழ்நாட்கள் ஓடிக்கொண்டிருக்கின்றன. இப்பயிற்சி மையம், இவைபோன்ற மத சம்பந்தமான எல்லா வினாக்களுக்கும், பகுத்தறிவு வாதிகளும் மறுக்க முடியாத அளவுக்குத் தக்க விளக்கம் அளிக்கிறது.

சைவ சித்தாந்தம், எந்த ஒரு செய்தியையும் காரண–காரிய இயைபுபடுத்தி, முன்னுக்குப் பின் முரண்படாமல், அளவை முறையில் (IN A LOGICAL WAY OF PRESENTATION) பேசுகின்றது. எனவே, இந்தப் பயிற்சி மையத்தில் பயிலும் மாணவர்கள், எதையும் வகைப்படுத்திச் சிந்திக்கும் முறையையும், தருக்க முறை வழு வாமல் பேசும் திறமையையும், யாரும் குறை கூறமுடியாதபடி எதையும் செய்யும் ஆற்றலையும் பெறுவர் என்பது உறுதி.

இப்பயிற்சியினால் தங்கள் தனி மனித வாழ்வும், தனித் தன்மையும் (Personality) சிறப்பு அடையும். தங்கள் சமூக அந்தஸ்து (Social Status) உயரும். தாங்கள் பிறர்க்கு வழிகாட்டியாக (Exemplar) வாழ்வீர்கள்.

மனிதப் பிறவியின் நோக்கம், உலகில் நிறைவுடன் வாழ்ந்து, உடலை விடும்போழுது, சிவபெருமான் திருவடியைப் பெறுவதே ஆகும். எனவே, சைவ சித்தாந்த ஞானக் கல்வி வாழ்நாள் முழுவதும் பயில வேண்டும். இப்பயிற்சியைப் பெறுதற் பொருட்டு, இம்மையம் தங்களுக்கு வழிகாட்டுகிறது.

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

உ
சிவமயம்
திருச்சிற்றம்பலம்

திருக்கயிலாய பரம்பரைத் திருவாவடுதுறை
ஆதீனத்திற்குச் சொந்தமான

# ஸ்ரீ ஜோதி மகாலிங்க சுவாமி திருக்கோயில்

திருவிடைமருதூர்

தஞ்சை மாவட்டத்தில் காவிரியின் தென்கரையில் அமைந்த திருவிடைமருதூர் திருத்தலமானது நால்வர், பட்டினத்தார், பத்திரகிரியார், வரகுண பாண்டியன், அருணகிரிநாதர், கருவூர்த் தேவர் முதலானோர் வழிபட்டுப் பெரும்பேறு பெற்ற பெருமையுடையது. இத்தலத்தின் நான்கு திசைகளிலும் விசுவநாதர், ஆன்மநாதர், ரிஷிபுரீசுவரர், சொக்கநாதர் ஆகிய மூர்த்திகளுக்கு கோயில்கள் அமைந்து பஞ்சலிங்க தலம் என்றும் அழைக்கப்படுகிறது.

ஆலய அமைப்பு முறைப்படி திருவலஞ்சுழி–விநாயகர், சுவாமிமலை–முருகன், சேய்ஞலூர்–சண்டேசுவரர், சூரியனார் கோயில்–சூரியன் முதலிய நவகோள்கள், சிதம்பரம்–நடராசர், சீர்காழி–பைரவர், திருவாவடுதுறை–திருநந்தி ஆகிய பரிவாரத் தலங்களுடன் அவற்றின் நடுவில் மூல மூர்த்தியாக நடுநாயகமாக ஸ்ரீமகாலிங்கப் பெருமான் விளங்குகின்றார்.

மனநலம் பாதிக்கப்பட்டவர்கள் ஸ்ரீமூகாம்பிகா சந்நிதியில் உள்ள ஸ்ரீசக்கர மகாமேருவை வழிபட்டு நலம் பெறுகிறார்கள். பிரம்ம ஹத்தி தோஷமும் நீங்குகிறது. மகாலிங்கப் பெருமான் தன்னைத் தாமே அருச்சித்த சிறப்புடைய தலம். சனி பகவான், சந்திரன் வழிபட்டுள்ளனர். காசிப முனிவர்க்கு இடைமருதீசனாகிய மருதவாணர் பால கண்ணனாகக் காட்சி கொடுத்துள்ளார்.

முத்தித் தலங்களான காசி, காளத்தி, கேதாரம், ஆரூர், வலஞ்சுழி, தில்லை, திருவெண்காடு, குடந்தை ஆகியவற்றுடன் போற்றப் பெறும்

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

சிறப்பான தலம் இடை மருதூர். நான்கு இராசகோபுரங்களும், உட்பகுதியில் 3 கோபுரங்களும் உள்ளன. அசுவமேதப் பிரகாரம், கொடுமுடிப் பிரகாரம், பிரவணப் பிரகாரம் ஆகியவைகளில் வலம்வரின் திருக்கயிலையை வலம்வந்த புண்ணியம் உண்டு, அனைத்துப் பாவங்களையும் நீக்கும் காருண்யாமிர்த தீர்த்தம், காவிரிப்பூசத் தீர்த்தம் என 32 தீர்த்தங்கள் உள்ளன. 27 நட்சத்திரத்திற்கும் 27 இலிங்கங்களை உடையது.

இடைமருதுறையும் ஸ்ரீஜோதி மகாலிங்கத்தை வழிபட நிறைகல்வி, அரசச் செல்வம் பெறுவர். வறுமை, பகை, நோய் நீங்கும். தடைபட்ட திருமணம், மக்கட்பேறு ஆகியவை எளிதில் கைகூடப் பெறும் சிறப்பான தலமாகும்.

சுமார் 1300 ஆண்டுகளுக்கும் மேற்பட்ட பழமையான சிறப்பு வாய்ந்த இத்திருக்கோயில் 30 ஆண்டுகளுக்குப் பிறகு கும்பாபிஷேகம் செய்ய உத்தேசிக்கப்பட்டுள்ளது. ***கும்பாபிஷேகம்*** 2002 ஆம் ஆண்டு ஆவணி மாதத்தில் செய்ய திட்டமிடப்பட்டுள்ளது. அனைத்து விபரங்களையும் ஸ்ரீஜோதி மகாலிங்கேசுவரர் நற்பணி மன்றத்தின் மூலம் தொடர்பு கொண்டு செயல்படுமாறு கேட்டுக் கொள்கிறோம்.

மெய்யன்பர்கள் அனைவரும் தங்களால் இயன்ற திரவியம் மற்றும் பொருளுதவிகளைச் செய்து ஸ்ரீமகாலிங்கசுவாமி அருட்கடாட்சம் பெற்று நீடு இனிய வாழ்வுடன் மேன்மைகள் பெற்றிட வேண்டுகிறோம்.

திருப்பணிக்கு நன்கொடைத் தொகையை சேர்ப்பிக்க விரும்பும் மெய்யன்பர்கள் கீழ்க்கண்ட முகவரிக்கு மணியார்டர் அல்லது டிமாண்ட் டிராப்ட் மூலம் அனுப்பவும்.

**ஸ்ரீஜோதி மகாலிங்கேசுவரர் நற்பணி மன்றம்,**
**திருவிடைமருதூர் — 612104**
**தஞ்சாவூர் மாவட்டம். போன் : (0435) 460660**

— புத்தக வெளியீட்டார் வேண்டுகோள்

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

## திருமுறை படனம் ஏன்? எப்படி?

பல சந்தர்ப்பங்களில் நாம் செய்யும் தவறுகள் நமக்குத் தெரிகின்றன, ஆயினும், எனக்கு ஏற்பட்ட சூழ்நிலையில் அதை நான் செய்தேன் என்று நமது மனசாட்சியைத் திருப்திப்படுத்தி விடுகிறோம், இன்னும் சொல்லப்போனால், நாம் செய்யும் தவறுகளுக்குக் காரணம் கண்டுபிடித்து, நம்மையும் பிறரையும் ஏமாற்றிக்கொண்டு இருக்கிறோம்,

திருந்தவேண்டும் என்னும் எண்ணம் அடிக்கடி நமக்கு ஏற்படும். ஆனால், திருந்துவதற்கான வழி தெரியாமையால், திருத்தம் பெறாமல் திரும்பத் திரும்பத் தவறுகளைச் செய்துகொண்டே இருக்கிறோம். அவற்றின் பயனாகிய துன்பங்களையும் அனுபவித்துக் கொண்டும் இருக்கிறோம். நமக்கு ஏற்படுகின்ற இந்த நிலைகளையெல்லாம் இறைவன் நன்றாக அறிந்து வைத்தே இருக்கிறான்.

திருந்த விரும்பும் ஒவ்வொருவரும், துன்பங்களிலிருந்து விடுபடுவதற்கு விரும்பும் ஒவ்வொருவரும், திருந்தி மகிழ்ச்சியாக வாழும் பொருட்டே, இறைவன் அருளாளர்களை இப்பூவுலகிற்கு அனுப்பி, அவர்களைக் கொண்டு அருள்வாக்குகளை வழங்கச் செய்திருக்கிறான். அந்த அருள் வாக்குகள், நமது அறியாமையைப் போக்கி, நம்மைச் சிறிது சிறிதாக திருந்தச் செய்கின்றன. கொலைகாரர்களும் குணங்கெட்டவர்களும் கூட, அந்த அருள் வாக்குகளைப் பாராயணம் செய்வார்களாயின், நல்லவர்களாகி விடுவார்கள். இவ்வுண்மையைச் சம்பந்தப் பெருமான் அருளிச்செய்த

"கொல்வாரேனும் குணம் பல நன்மைகள்
இல்லாரேனும் இயம்புவர் ஆயிடின்
எல்லாத் தீங்கையும் நீங்குவர் என்பரால்
நல்லார் நாமம் நமச்சி வாயவே"

என்னும் திருவாக்கு மெய்ப்படுத்துகின்றது.

சிலர், வாழ்நாளின் பெரும்பகுதியைக் கழித்துவிட்டதால் இனித் தமக்கு எந்தவிதக் கழுவாயும் இல்லை என்று நினைத்து, அறுபது வயது ஆன பின்னர், தமக்கு உற்ற துன்பத்தை அனுபவித்தே ஆக வேண்டும் என்று வெதும்பிய உள்ளத்தோடு, நாட்களை எண்ணிக் கொண்டிருக்கிறார்கள். அந்த நிலையில் உள்ளவர்களும், அருளாளர்களின் திருவாக்குகள் ஆகிய திருமுறைகளைப் பாராயணம் செய்வாராயின் அவர்களுக்கும் துன்ப நீக்கம் ஏற்படும்.

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

இவ்வுண்மையை,

"பாலனாய்க் கழித்த நாளும், பனிமலர்க் கோதைமார்தம்
மேலனாய்க் கழித்தநாளும், மெலிவோடு மூப்பு வந்து
கோலனாய்க் கழித்த நாளும் குறிக்கோள் இலாது கெட்டேன்
சேலுலாம் பழனவேலித் திருக்கொண்டீச் சரத்துளானே"

என்னும் அப்பர் அருள்வாக்கு தெளிவுபடுத்திகின்றது. எனவே, எந்த வயதினரும் தம் தவறுகளுக்காக வருந்தித் திருந்தினால், நிச்சயம் இறைவனால் மன்னிக்கப்படுவார்கள் என்பது உண்மை.

தவறுகள் செய்வது தவிர்க்கமுடியாததாக இருக்கலாம். திருந்துவதற்கு முயற்சி செய்வது தவிர்க்கமுடியாதது அல்லவே. என்ன தவறுகளைச் செய்தாலும், அதற்காக வருந்தி மீண்டும் தவறு செய்யாமல் இருந்தால் போதும், திருத்தம் ஏற்படும்.

இவ்வுண்மையைத் தெளிவுபடுத்தியே, திருவள்ளுவர்,

"எற்று என்று இரங்குவ செய்யற்க, செய்வானேல்
மற்று அன்ன செய்யாமை நன்று" (655)

என்று "வினைத்தூய்மை" என்னும் அதிகாரத்தில் அருளிச் செய்திருப்பதைக் கருத்தில் இருத்திக்கொள்ளல் வேண்டும்.

(எற்றென்று-இந்தமாதிரித் தவறு செய்து விட்டேனே என்று)

**திருமுறைகள் ஓதுவதன் பயன் :**

எத்துணைதான் திருந்த வேண்டும் என்று நாமாக விரும்பினாலும், நமக்குள்ள அறியாமை காரணமாக, திரும்பத் திரும்பத் தவறுகளை நாம் செய்து கொண்டுதான் இருக்கிறோம். இந்த அறியாமையிலிருந்து நம்மை நாம்காத்துக் கொள்வதற்குத் திருமறை வாக்குகள் பெரிதும் துணை செய்கின்றன.

இறைவன், வினைவயப் பட்டுத் துன்பப்படும் நாம் அனைவரும், திருந்தி உய்யும் பொருட்டு, அருளாளர்களை இப்பூவுலகிற்கு அனுப்பி, அவர்கள் வாயிலாக நமக்குத் தன் அருளிப்பாடுகளைச் செய்துள்ளான். அருளாளர்களை அதிட்டித்து நின்று, இறைவனே திருவாய் மலர்ந்து அருளிய சொற்களே திருமுறைகளில் உள்ளன. இவ்வுண்மையை 'எனது உரை தனது உரையாக" என்று அருளிச் செய்துள்ள சம்பந்தப்பெருமான் திருவாக்கிலிருந்து அறியலாம். திருமுறைகளில்

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

உள்ள ஒவ்வொரு 'சொல்லும்' மந்திர ஆற்றலை உடையது. எனவே, திருமுறைகளை நாம் பாராயணம் செய்யும் போது, அதில் உள்ள மந்திர ஆற்றல், நமது உயிரில் கலந்து, நமது அறியாமையைப் போக்கும் திறன் உடையது.

திருமுறைகளை ஓதி, ஊழ்வலியிலிருந்து நாம் விடுபட்டு, பிறவிப்பயனைப் பெறும் பொருட்டே திருமுறைகளை இறைவன் நமக்கு வழங்கியருளியுள்ளான். திருமுறைகளை இறைவன் தோற்றுவித்ததன் நோக்கம் இதுவே ஆகும். இவ்வுண்மையைச் சம்பந்தப் பெருமானின் திருக்கடைக் காப்பில் உள்ள திருவாக்குகளிலிருந்து நாம் தெளிவாகப் புரிந்து கொள்ளலாம்.

"நறுநீர் உகும் காழி ஞானசம்பந்தன்
வெறுநீர்த் திருப் பறியல் வீரட்டத்தானை
பொறிநீடு அரவன், புனைப்பாடல் வல்லார்க்கு
அறும்நீடு அவலம், அறும், பிறப்புத்தானே" (1-134-11)

என்னும் திருக்கடைகாப்பு இவ்வுண்மையை வலியுறுத்துகின்றது,
(நீடு அவலம்-நீண்டநாட்களாக இருக்கும் துன்பம். அறும்-நீங்கும்)

திருமுறைகளைத் தவிர, நாம் நமது துன்பங்களிலிருந்து விடுபடுவதற்கு வேறு எந்த உபாயமும் இல்லை. நாம் திருந்தி வாழ்வதற்குத் திருமுறைகளே பெரிதும் உதவுகின்றன.

திருமுறைகளில் உள்ள சொற்களில் உள்ள மந்திர ஆற்றல், நம்மை அறியாமலேயே நமக்கு வரவுள்ள துன்பங்களைப் போக்கி, இன்பங்களை விளைவிக்கும் என்பதில் எள்ளத் துணை ஐயப்பாட்டிற்கு இடம் இல்லை. இந்த மந்திர ஆற்றல் இறையாற்றல் ஆகும். அவற்றோடு நாம் நாள்தோறும் தொடர்புகொள்ளும் போது அந்த இறையாற்றல், நம்மைத் திருத்துகின்றது. நம்மை அறியாமலே நாம் திருந்திக் கொண்டிருப்போம். திருந்திய மனிதனுக்கு வினைப்பயனை ஊட்டத் தேவை இல்லாததால் நாளடைவில், விதியை மாற்றும் வல்லமையையும் திருமுறைப் படனம், நமக்குச் செய்து உதவுகிறது. எனவே திருமுறைகளைப் படனம் (பாராயணம்) செய்பவர்கள் விதியை வெல்லமுடியும்.

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

**எனது அனுபவம் :**

இருபது ஆண்டுகளுக்கு மேலாக எனக்குச் சோதிட நூல்களோடு பயிற்சி உண்டு. என்னிடம் சோதிடம் பார்க்க வருபவர்களுக்குப் பரிகாரமாகத் திருமுறைகளில் கயிறு சாத்திப் பார்த்து, திருவருளால் கிடைக்கும் அப்பதிகத்தைப் படனம் செய்து வரும்படி கூறுவேன். எதிர் பார்த்த கால எல்லைக்கு முன்பே, பயன் ஏற்பட்டு வந்தது. அந்த நிகழ்ச்சிகளையெல்லாம் இங்குக் கூறுவதற்குக் காலமும் இடமும் போதா. கணக்கில் அடங்காத பல பயன்கள் ஏற்பட்டுருக்கின்றன. நீங்களும் திருமுறைகளைப் படனம் செய்து, கோரிய பயன்களைப் பெறுவதற்கு எல்லாம் வல்ல இறைவன் திருவருள் முன்னின்று உதவும் என நம்புகிறேன்.

**திருமுறைகளைப் படனம் செய்வதற்கும் விதிவேண்டுமா?**

"எதற்கும் ஒரு விதிவேண்டும். திருமுறைகளைப் படனம் செய்வதற்கும் விதி இருந்தால் தான், செய்ய முடியும்" என்று ஒரு சிலர் என்னிடம் நேரில் கூறினர், இது ஒரு வகையான நழுவல் பேச்சு ஆகும். விதிவேறு, முயற்சிவேறு, முயற்சி செய்வதற்கும் விதி வேண்டும் என்று கூறுவது பொருந்துமா?

'விதி' என்பது இந்தப் பிறப்பில் நமக்கு ஏற்பட்டிருக்கும் ஒருவகைச் சூழ்நிலையே ஆகும், 'முயற்சி' என்பது, அந்தச் சூழ்நிலையில் இருந்து கொண்டே, அதனைப் பொருட்படுத்தாமல் முயன்று முயன்று முன்னேறுவது ஆகும். அந்நிலையில் அத்தகைய சூழ்நிலையிலிந்து விடுபடுவது அனுபவ உண்மை.

விதிப்படி ஒருவனுக்கு ஒரு சூழ்நிலை அமைகிறது. அவ்வாறு அமைந்த சூழ்நிலையைக் குறித்து, உலகத்தில் யாரும் அவனைக் குறைகூற மாட்டார்கள், அஃது அவன் தலை எழுத்து என்று அமைதிகொள்வர். ஆனால், அந்தச் சூழ்நிலையையே, தனக்குச் சாதகமாகக் கொண்டு, மேற்கொண்டு எந்த முயற்சியும் மேற்கொள்ளாமல், அவன் வாளா இருப்பானாகில், உலகத்தில் "இவனது சோம்பேறித் தனமே, இந்த இழிநிலைக்குக் காரணம்" என்று அவனைப் பழிப்பார்கள். எனவே முயற்சி செய்ய வேண்டுவது இன்றியமையாததாகும், இவ்வுண்மையைத் தெளிவுபடுத்தித் திருவள்ளுவர்,

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

"பொறியின்மை யார்க்கும் பழியன்று: அறிவு அறிந்து
ஆள்வினை இன்மை பழி" 618

என்று அருளிச் செய்வாராயினர்.

இதிலிருந்து திருமுறைகளைப் படனம் செய்து, திருவந்துவதற்கான முயற்சிகளை மேற்கொள்வதற்கும் ஒரு விதி வேண்டும் என்று கூறுவது முற்றிலும் பொருந்தாது என்பது பெறப்படும்.

இந்த திருக்குறளில் வரும் "அறிவு அறிந்து" என்னும் தொடருக்கு "அறியவேண்டுவனவற்றை அறிந்து" என்று பரிமேலழகர் உரை கூறுகிறார். அறிய வேண்டுவன யாவை? "நமக்கு விதியை வகுத்து ஊட்டுபவன் இறைவன், இறைவன் அருளால் நமக்குக் கிடைக்கப் பெற்ற திருமுறைகளைப் படனம் செய்வதால், நமக்குத் திருத்தம் ஏற்படும். அந்தத் திருத்தம் காரணமாக, மேலும் விதியை ஊட்டுவதை இறைவன், சிறிது சிறிதாகக் குறைத்து, அறவே நிறுத்தி விடுவான்" என்பனவே, நாம் அறியவேண்டுவன ஆகும். எனவே, திருமுறைப்படனம் நிச்சயம் நமது விதியை மாற்றி, நமது துன்பங்களைப் போக்கி, நம்மை நிம்மதியாக வாழச் செய்யும் என்பது உண்மை.

எப்படி படனம் செய்ய வேண்டும்?

படனம் என்ற சொல்லுக்குப் பாராயணம் என்று பொருள். அஃதாவது நாள்தோறும் விடாமல் ஓதுவது ஆகும். இசை தெரிந்திருக்க வேண்டும் என்ற அவசியம் இல்லை. இசை தெரிந்தவர்கள் இசையோடு பாடிப் பயன் பெறலாம். இசை தெரியாதவர்கள், இயன்ற அளவு சற்று இசைத்துப் படனம் செய்தால் போதும், பயன் உண்டு.

படனம் செய்யும் போது, சொற்கள் வெளிப்பட வேண்டும். அச்சொற்களில் உள்ள ஒலி அலைகள், வலுவான மந்திர ஆற்றலை உடையன. அந்த ஆற்றல் நமக்கு ஓர் அரணக அமைகிறது. (Protective force) எனவே, மிகவும் மெல்லிய குரலிலாவது, பதிகங்களை வாய்விட்டுப் படனம் செய்ய வேண்டும் என்பது மிகவும் முக்கியம். இசை முக்கியமில்லை என்பதை,

'கோழை மிடறாக கவிகோளும் இலவாக, இசை கூடும் வகையால்
ஏழை அடியார் அவர்கள் யாவை சொன சொல் மகிழும் ஈசன்'(3-71-1)

என்று சம்பந்தப்பெருமான் அருளிச் செய்திருப்பதிலிருந்து

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

புரிந்துகொள்ளலாம்.

படனம் செய்யும்போது, இந்தத் துன்பத்திலிருந்து என்னை விடுவித்துவிடு என்று இறைவனை வேண்டி, உள்ளம் உருக, உறைப்புடன் படனம் செய்யவேண்டும். அழுத்தமான நம்பிக்கை வேண்டும். இது மிக மிக முக்கியம்.

"வல்லதோர் இச்சையினுல் வழிபாடு
இவைபத்தும் வாய்க்கச் சொல்லுதல்
கேட்டல் வல்லார், துன்பம் துடைப்பாரே" (1-105-11)

என்று ஞானசம்பந்தப் பெருமான் அருளிச் செய்திருப்பதிலிருந்து, உங்களுக்குள்ள பதிகத்தை எவ்வளவு உறைப்புடன் படனம் செய்ய வேண்டும் என்பதைப் புரிந்து கொள்ளலாம்.

"சொல்லுதல் கேட்டல் வல்லார்" என்பது, எழுதப் படிக்கத் தெரிந்தவர்கள் தாமே இப்பதிகத்தைப் படனம் செய்ய வேண்டும் என்பதையும், எழுதப்படிக்கத் தெரியாதவர்கள் பிறரைப் பாடச்செய்து கேட்டல் வேண்டும் என்பதையும் குறிக்கிறது.

உங்களுக்கு வேண்டியவர்களுக்காக நீங்கள், குறிப்பிட்ட பதிகத்தைப் படனம் செய்தாலும் பயன் ஏற்படும்.

காலையில் எழுந்ததும், கடன்களைமுடித்து, உங்களுக்குத் தெரிந்த அளவு சற்று இசைத்துப் பாடினுல் போதும், நாள் தோறும் இடைவிடாமல் ஓதி வாருங்கள். ஓதத்தொடங்கிய சில நாட்களிலேயே, தெளிவு ஏற்படுவதை நீங்களே உணர்வீர்கள். மனத்தை ஒரு முகப்படுத்திப் தொடர்ந்து விடாமல் முழுநம்பிக்கையுடன் படனம் செய்யுங்கள். கோரிய பயன்களை நிச்சயம் பெறுவீர்கள். இனிப் பதிகப் படனத்திற்குச் செல்லுங்கள்.

## நன்றி

புத்தகம் : *விதியை வெல்வது எப்படி?*

ஆசிரியர் : *"சித்தாந்த வித்யாசாகரம்" "செந்நெறி செல்வர்"*
*"மெஞ்ஞான வள்ளல்" திரு. கு. வைத்தியனாத ஈசான தேசிகர்*

வெளியீடு : *திருவாவடுதுறை ஆதீனம்*

*இப்பகுதியை அச்சிட இசைந்தமைக்கு ஆதீனம் மற்றும் ஆசிரியர்க்கு நன்றி.*

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

# திருஞானசம்பந்தர் தேவாரம் திருமுறை திரட்டு

திரு. **மு. அருணாசலம்** அவர்கள்
புதுமனை புகுவிழா வெளியீட்டு மலர்

## அன்பளிப்பு மலர்

நாள் : 22–11–2001
இடம்: பாண்டிச்சேரி


நூல் தொகுப்பு:
டாக்டர் **ச. ரவிசங்கர்,** பி.டி.எஸ்.,
ஜெய் சற்குரு பல் மருத்துவமனை
ரெட்டியார்பாளையம்
பாண்டிச்சேரி – 605 010
போன்: 200411



நூல் வெளியீடு:
திரு. **மு. அருணாசலம்**
ஏபி பில்டர்ஸ்
67, மூன்றாவது குறுக்கு வீதி
ஸ்ரீ முகாம்பிகை நகர்
ரெட்டியார்பாளையம்
பாண்டிச்சேரி–605 010
போன்: 98423–33773

அச்சிட்டோர்: வைகை ஆப்செட், பாண்டி–3, போன்: 225257, 342492

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

உ

சிவமயம்



"தென்னாடுடைய சிவனே போற்றி
எந்நாட்டவர்க்கும் இறைவா போற்றி"

"ஈசன் அடிபோற்றி எந்தை அடிபோற்றி
தேசன் அடிபோற்றி சிவன் சேவடி போற்றி
நேயத்தே நின்ற நிமலன் அடி போற்றி
மாயப் பிறப்பு அறுக்கும் மன்னன் அடி போற்றி
சீர்ஆர் பெருந்துறை நம் தேவன் அடி போற்றி
ஆராத இன்பம் அருளும் மலை போற்றி"

"அண்ணாமலை எம் அண்ணா போற்றி
கண்ணார் அமுதக் கடலே போற்றி"

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

உ

சிவமயம்

# முதல் திருமுறை

## திருப்பிரமபுரம்

தல விளக்கம் : காவிரி வடகரைத் தலம் – சீர்காழி என்று வழங்கப்படுவது. திருஞான சம்பந்தர் திரு அவதாரம் செய்த பதி. ஞானப்பால் அருந்திப் பாடியது.

திருச்சிற்றம்பலம்

தோடுடைய செவியன்விடை யேறியோர்
தூவெண் மதிசூடிக்
காடுடைய சுடலைப் பொடி பூசியென்
உள்ளங்கவர் கள்வன்
ஏடுடைய மலரான் முனைநாள் பணிந்து
ஏத்தஅருள் செய்த
பீடுடைய பிராமபுரமேவிய
பெம்மான்இவன் அன்றே.

தோடு என்னும் அணியை அணிந்துள்ள, உமாதேவியை இடப்பாகம் உடைய சிவபெருமான் இடபவாகனத்தில் ஏறி, தூய வெண்மதியைச் சூடி திருவெண்ணீறு மேனியில் பொலிய என் உள்ளத்தைக் கவர்ந்தவன். அப்பெருமான், ஒரு காலத்தில் நான்முகனுடைய வழிபாட்டினை ஏற்று அருள் செய்தவன். அவனே எனக்குக் காட்சி தந்தருளியவன். அவன் இவனே அல்லவா!

முற்றல்ஆமையிள நாகமோடுஏனம்
முளைக்கொம்புஅவை பூண்டு
வற்றலோடுகல னாப்பலி தேர்ந்தெனது
உள்ளம்கவர் கள்வன்
கற்றல்கேட்டல்உடை யார்பெரியார்கழல்
கையால்தொழுது ஏத்தப்
பெற்றம்ஊர்ந்தபிர மாபுரமேவிய
பெம்மான்இவன் அன்றே.

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

ஆமையோடு, நாகம் முதலானவைகளை ஆபரணமாகக் கொண்டு திருஒடு ஏந்தி பிச்சை கொள்ளும் சிவபெருமான், என் உள்ளத்தைக் கவர்ந்தவன். நல்ல நூல்களைக் கற்றுத் தேர்ந்தவர்களும், கேள்வி ஞானம் பெற்றவர்களும், திருத்தொண்டு செய்யும் பெருமக்களும் கரங்கூப்பி வணங்கி நிற்க இடபவாகனத்தில் காட்சி தரும் பெருமான் இவனல்லவா?

நீர்பரந்தநிமிர் புன்சடைமேலோர்
நிலாவெண் மதிசூடி
ஏர்பரந்தஇன வெள்வளைசோரஎன்
உள்ளம்கவர் கள்வன்
ஊர்பரந்தஉல கின்முதலாகிய
ஓரூர்இது என்னப்
பேர்பரந்தபிர மாபுரமேவிய
பெம்மான்இவன் அன்றே.

கங்கை தங்கும் சடையில் குளிர்ந்த வெண்ணிலவைச் சூடி, அழகிய வளைகள் கைகளிலிருந்து நழுவிச் செல்லுமாறு என் உள்ளத்தையும் மேனியையும் உருகச் செய்து கவர்ந்தவன் சிவபெருமான். உலகிலுள்ள ஊர்கள் யாவும் பிரளய காலத்தில் அழிந்தாலும், அழியாது எப்போதும் நிலவும் பிரமபுரத்தில் இருக்கும் பெருமான் இவனல்லாவா!

விண்மகிழ்ந்தமதில் எய்ததும்அன்றி
விளங்குதலை யோட்டில்
உண்மகிழ்ந்துபலி தேரியவந்தெனது
உள்ளம்கவர் கள்வன்
மண்மகிழ்ந்தஅர வம்மலர்க் கொன்றை
மலிந்தவரை மார்பில்
பெண்மகிழ்ந்தபிர மாபுரமேவிய
பெம்மான்இவன் அன்றே.

வானத்தில் பரந்து சென்று துன்புறுத்தும் தன்மையில் மகிழ்ச்சி கொண்ட முப்புரக் கோட்டைகளை எரித்தும் அன்றி, பிரமனுடைய கபாலத்தைப் பிச்சைப் பாத்திரமாகக் கொண்டு பிச்சையேற்று என் உள்ளத்தைக் கொள்ளை கொண்டு, அரவமும் கொன்றை மலரும் மார்பினில் பொலிய உமாதேவியை மகிழ்ந்து இடப்பாகத்தில் வைத்து பிரமாபுரம் மேவிய பெருமான் இவனல்லவா!

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

ஒருமைபெண்மைஉடை யன்சடையன்விடை
ஊரும்இவன் என்ன
அருமையாகஉரை செய்யஅமர்ந்தெனது
உள்ளம்கவர் கள்வன்
கருமைபெற்றகடல் கொள்ள மதிந்ததோர்
காலம்இது என்னப்
பெருமைபெற்றபிர மாபுரமேவிய
பெம்மான்இவன் அன்றே.

ஒரே வடிவதத்தில் பெண்ணுருவும் ஆணுருவும் கொண்டு இரு உருவங்களைக் காட்டுபவனாகி, சடை முடியுடன் இடபத்தில் அமரும் சிவபெருமான் அருமையான உரைகளைக் சொல்லும் பொருட்டு எனது உள்ளம் அமர்ந்து என்னைக் கவர்ந்தவன். ஊழிக் காலத்திலும் அழியாத பெருமையுடைய பிரமாபுரம் மேவிய பெருமான் இவனல்லவா!

மறைகலந்தஒலி பாடலோடு ஆடலர்
ஆகிமழு வேந்தி
இறைகலந்தஇன வெள்வளைசோரஎன்
உள்ளம்கவர் கள்வன்
கறைகலந்தகடி யார்பொழில்நீடுயர்
சோலைக்கதிர் சிந்தப்
பிறைகலந்தபிர மாபுரமேவிய
பெம்மான்இவன் அன்றே.

வேத ஒலி முழங்க, பாடலுடன் ஆடலும் செய்து மழு ஏந்தி இருப்பவன் ஈசன். அவன் என்னுடைய கைகளில் உள்ள வளைகள் தாமே கழன்று விழும்படி என் உள்ளத்தைக் கவர்ந்து உருகச் செய்தவன். அடர்ந்த சோலைகள் திகழ்ந்து நறுமணம் வீச நிலவின் தன்மையுடைய பிரம்மபுரத்தில் மேவிய பெருமான் இவனல்லவா!

சடைமுயங்குபுன லன்அனலன்எரி
வீசிச்சதிர் வெய்த
உடைமுயங்குஅர வோடுஉழிதந்துஎனது
உள்ளம்கவர் கள்வன்
கடல்முயங்குகழி சூழ்குளிர்கானல்அம்
பொன்னஞ்சிறகு அன்னம்
பெடைமுயங்குபிர மாபுரம்மேவிய
பெம்மான்இவன் அன்றே.

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

சடையில் கங்கையும் கரத்தில் நெருப்பும் ஒளிதந்து பெருமை கொள்ளவும், நாகமானது இறுகப் பற்றி உடலின் மீது திரியவும் காட்சி தந்து என் உள்ளத்தைக் கவர்ந்த சிவபெருமான், உப்பங்கழி பொருந்திய சோலையில் அன்னப் பறவைகள் தம் பேடைகளுடன் கூடியுள்ள பிரமாபுரத்தில் இருப்பவன். அவன் இவனல்லவா!

வியர்இலங்குவரை உந்திய தோள்களை
வீரம்விளை வித்த
உயர்இலங்கைஅரை யன்வலிசெற்றுஎனது
உள்ளம்கவர் கள்வன்
துயர்இலங்கும்உல கில்பலஊழிகள்
தோன்றும்பொழுது எல்லாம்
பெயர்இலங்குபிர மாபுரமேவிய
பெம்மான்இவன் அன்றே

சினத்தின் வயப்பட்டு வீரத்தைக் காட்டும் வகையில் கயிலையைப் பெயர்த்த இலங்கை அரசனுடைய வலிமையை அழித்து எனது உள்ளத்தைக் கவர்ந்த ஈசன், வினையின் கன்மத்தைச் சேர்த்துத் துயரை விளைவிக்கும் இந்த உலகில் ஊழிக்காலத்திலும் அழியாமல் நிலைத்து நின்று தனது சிறப்பினை நல்கும் பதியாகிய பிரமபுரத்தில் மேவியவன். அவன் இவனல்லவா!

தாள்நுதல் செய்துஇறை காணியமாலொடு
தண்தாமரை யானும்
நீணுதல்செய்துஒழிய நிமிர்ந்தான் எனது
உள்ளம்கவர் கள்வன்
வாள்நுதல்செய்மக ளிர்முதலாகிய
வையத்தவர் ஏத்தப்
பேணுதல்செய்பிர மாபுரமேவிய
பெம்மான்இவன் அன்றே.

திருவடியைக் காணத் திருமாலும் திருமுடியைக் காணப் பிரமனும் முயற்சி செய்ய, அவர்கள் செயல் பயனற்றவாகச் செய்யும் வகையில் நீண்டு வளர்ந்தவனாகிய ஈசன் எனது உள்ளத்தைக் கவர்ந்தவன். வாள்போன்ற நெற்றியை உடைய மகளிர் முதலாக உலகத்தவர் அனைவரும் ஏத்தப் பேணிக் காக்கும் பிரமாபுரம் மேவிய பெருமான் இவனல்லவா!

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

புத்தரோடுபொறி யில்சமணும்புறம்
கூறநெறி நில்லா
ஒத்தசொல்லஉல கம்பலிதேர்ந்தெனது
உள்ளம்கவர் கள்வன்
மத்தயானைமறுக அவ்உரிபோர்த்தோர்
மாயம்இது என்னப்
பித்தர்போலும்பிர மாபுரமேவிய
பெம்மான்இவன் அன்றே.

புலன் உணர்வுகளை நீத்த புத்தரும் சமணரும் நன்னெறியில் அமையாத மாற்றுக் கருத்துக்களைக் கூறிடினும், பிச்சையேற்று எனது உள்ளத்தைக் கவர்ந்து, செருக்குற்ற யானையை அழித்து, அதன் தோலைப் போர்வையாக்கிக் கொண்டு பின்னர் மாயை காட்டிப் பித்தனைப் போன்று பிரமாபுரம் மேவிய பெருமான் இவனல்லவா!

அருநெறியமறை வல்லமுனியகன்
பொய்கையலர் மேய
பெருநெறியபிர மாபுரமேவிய
பெம்மான்இவன் தன்னை
ஒருநெறியமனம் வைத்துணர்ஞானசம்
பந்தன்உரை செய்த
திருநெறியதமிழ் வல்லவர்தொல்வினை
தீர்தல்எளி தாமே.

மறைவல்ல பிரமன் பூசித்த பிரமாபுரம் மேவிய பெருமானை ஒன்றிய மனத்தினால் உணர்ந்து ஞானசந்பந்தன் உரைத்த திருநெறிய இத்தமிழ்ப் பதிகத்தை ஓதவல்லவருடைய தொல்வினை எளிதாகத் தீரும்.



In Public domain. Digitization Muthulakshmi Research Academy

## திருவண்ணாமலை

தலவிளக்கம் : நடுநாட்டுத்தலம். திருமால், பிரம்மதேவர், சூரியன், சந்திரன், அட்டவசுக்கள் முதலானோர் பூசித்தது. ஈசன் திருவடியைத் திருமாலும், திருமுடியைப் பிரமதேவரும் தேடியும் காண முடியாத நிலையில் ஈசன் சோதிப் பிழம்பாகித் தோன்றி காட்சி நல்கிய சிறப்புப் பெற்றது இத்திருத்தலம். திருக்கோயில் மலையை ஒட்டியது. மலையை வலம் வருதல் சிறப்பு. முருகப் பெருமான் அருணகிரிநாதருக்குக் கம்பத்தில் தோன்றி காட்சி தந்த இடம் இது. இத் தலத்தின் கார்த்திகை தீபப் பெருவிழா சிறப்புடையது. இத்தலம் பஞ்ச பூதத்தலங்களுள் நெருப்பு: நினைக்க முத்தி தரும் தலம் இதுவே.

திருச்சிற்றம்பலம்

உண்ணாமுலை உமையாளொடும்
உடனாகிய ஒருவன்
பெண்ணாகிய பெருமான்மலை
திருமாமணி திகழ
மண்ணார்ந்தன அருவித்திரள்
மழலைம் முழவு அதிரும்
அண்ணாமலை தொழுவார்வினை
வழுவாவண்ணம் அறுமே.

உண்ணாமுலை என்னும் திருநாமம் தாங்கிய உமாதேவியோடு உறைகின்ற ஒப்பறற்வனாகிய ஈசன் அத்தேவியைத் தன் இடப்பாகத்தில் வரித்துப் பெண் ஆயினான். அப்பெருமானுடைய மலையாகிய திருவண்ணாமலை செல்வம் மிக்க மணிகளைக் கொண்டுள்ளது. அம் மலையிலிருந்து மண்ணில் பொருந்த வீழும் அருவியானது இளமுழவின் ஓசையைத் தருகின்றது. அத்தகைய அண்ணாமலையைத் தொழுபவர்தம் வினைகள் தவறாமல் அறுந்து வீழும்.

தேமாங்கனி கடுவன்கொள
விடுகொம்பொடு தீண்டித்
தூமாமழை துறுகல் மிசை
சிறுநுண்துளி சிதற
ஆமாம்பிணை அணையும்பொழில்
அண்ணாமலை அண்ணல்
பூமாங்கழல் புனைசேவடி
நினைவார்வினை இலரே.

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

உயர்ந்த மாங்கனிகளை ஆண் குரங்கு பறித்துக் கொள்ளவும், அதனால் அசையும் மாங்கொம்புகள் மேகத்தைத் தொட்டு சிறிய நீர்த் துளிகளைச் சிதறும்படி செய்ய பெருமையான பசுக்கள் எருதுகளுடன் சாரும் சோலைகளையுடைய அண்ணாமலை அண்ணலின், பூப்போன்று மென்மையாயும் செம்மை தருவனவாயும் திகழும் திருவடியை நினைப்பவர்களுக்கு வினை இல்லை.

பீலிம்மயில் பெடையோடுறை
பொழில்சூழ்கழை முத்தம்
சூலிம்மணி தரைமேல்நிறை
சொரியும்விரி சாரல்
ஆலிம்மழை தவழும்பொழில்
அண்ணாமலை அண்ணல்
காலன்வலி தொலைசேவடி
தொழுவாரன புகழே.

தோகை விரித்தாடும் மயில் தன் பெடையோடு உறையும் பொழிலும், முத்தும் மணியும் தரையில் பரவச் சிதறி ஒளி திகழவும், நீர்த்திரள் பொருந்திக் குளிர்ச்சி மலரவும் உள்ள இடம் அண்ணாமலை. அவ் அண்ணல், மார்க்கண்டேயனைக் காக்கும் பொருட்டுக் காலனை அழித்தவன். அப் பெருமானுடைய திருவடியை வணங்குபவர் புகழ் பெறுவர்.

உதிரும்மயிர் இடுவெண்தலை
கலனாஉல கெல்லாம்
எதிரும்பலி உணல்ஆகவும்
எருதுஏறுவது அல்லால்
முதிரும் சடை இளவெண்பிறை
முடிமேல்கொள அடிமேல்
அதிரும்கழல் அடிகட்குஇடம்
அண்ணாமலை அதுவே.

ஈசன், ஒரு காலத்தில் பிரம்மனுடைய ஒரு தலையைக் கொய்து மறக்கருணை ஆற்ற, அதுவே திருஒடு எனத் திருக்கரத்தில் சேர்ந்தது. அது பலியேற்கும் பிச்சைப் பாத்திரமாக அமைய எல்லோரும் எதிர்வந்து பிச்சை இட்டனர். அதனை உணவாகவும் இடபத்தை வாகனமாகவும் மற்றும் முதிர்ந்த சடையும் இளவெண் மதியும் முடியில் தரித்துத் திருவடியில் ஒலிக்கும் கழலினையுடைய அடிகளாகிய ஈசனுக்குரிய இடமாவது, அண்ணாமலையே ஆகும்.

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

மரவம்சிலை தரளம்மிகு
மணிஉந்துவெள் ளருவி
அரவம்செய முரவம்படும்
அண்ணாமலை அண்ணல்
உரவம்சடை உலவும்புனல்
உடனாவதும் ஓரார்
குரவம்கமழ் நறுமென்குழல்
உமைபுல்குதல் குணமே.

அழகிய ஒளி வீசும் முத்துக்களும், இரத்தினங்களும் மிகுந்திருக்கத் தூய்மையான அருவியின் ஒலி பரவுதலால் கலகலவெனச் சலனத்தையுடைய அண்ணாமலையின் அண்ணலாகிய ஈசன் பாம்பும் கங்கையும் தன் சடையில் பொலிவதையும் ஒரு பொருட்டாகக் கொள்ளாமல் உமாதேவியுடனாய் விளங்கி இருப்பது மேன்மை தருவதாகும்.

பெருகும்புனல் அண்ணாமலை
பிறைசேர்கடல் நஞ்சைப்
பருகுந்தனை துணிவார்பொடி
அணிவார்அது பருகிக்
கருகும்மிடறு உடையார்கமழ்
சடையார்கழல் பரவி
உருகும்மனம் உடையார்தமக்கு
உறுநோய்அடை யாவே.

பெருகும் புனலையுடைய அண்ணாமலையார், கடலில் தோன்றிய நஞ்சைப் பருகும் வல்லமை உடையவர்; அந்த நஞ்சினைப் பருகியதன் விளைவாகக் கண்டம் கருமை நிறம் அடையப்பெற்றவர்; திருநீற்று மேனியர்; மணங்கமழும் சடையை உடையவர். அப்பெருமானுடைய திருவடியைப் போற்றி மனம் உருகி வழிபடும் அடியவர்களுக்கு பிறவி எடுக்கின்ற தன்மைத்தாகிய நோய் இல்லை.

கரிகாலன் குடர்கொள்வன
கழுதாடிய காட்டில்
நரியாடிய நகுவெண்தலை
உதையுண்டு அவை உருள
எரியாடிய இறைவர்க்குஇடம்

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

இனவண்டு இசைமுரல
அரியாடிய கண்ணாளொடும்
அண்ணாமலை அதுவே.

கரிய கால்களையுடைய நரிகள் குடல்களைத் தின்றும், வெண்மையான மண்டை ஓட்டினை உருளும்படி கால்களால் உதைத்தும் ஆடிக் கொண்டிருக்கப் பேய்கள் ஆடும் இடுகாட்டில் திருக்கரத்தில் தீப்பிழம்பை ஏந்தி ஆடும் இறைவனுக்கு உரிய இடம் என்பது கூட்டம் கூட்டமாக வண்டுகள் இசை எழுப்ப, ஈரமும் குளிர்ச்சியும் கலந்த கண்களையுடைய உமாதேவியுடன் விளங்கும் அண்ணாமலையாகும்.

ஒளிறூபுலி அதள்ஆடையன்
உமைஅஞ்சுதல் பொருட்டால்
பிளிறூகுரல் மதவாரண
வதனம்பிடித் துரித்து
வெளிறூபட விளையாடிய
விகிர்தன்இரா வணனை
அளறூபட அடர்த்தான்இடம்
அண்ணாமலை அதுவே.

ஒளிரும் புலியின் தோலை ஆடையாக உடையவன்; உமாதேவி அச்சம் கொண்டதையொட்டி பிளிர்ந்து வந்து எதிர்த்த மதயானையின் முகத்தைப் பிடித்தும் அதன் தோலை உரித்தும் திருவிளையாடல் நடத்தியவன்; யாவராலும் கணித்துக் கூற முடியாதவாறு வேறுபாட்டையுடையவன்; மலை எடுத்த இராவணனைச் சேற்றில் அழுந்துமாறு தண்டித்தவன். அப்பெருமானுடைய இடமாவது அண்ணாமலையே.

விளவார்கனி படநூறிய
கடல்வண்ணனும் வேதக்
கிளர்தாமரை மலர்மேலுறை
கேடில்புக ழோனும்
அளவாவணம் அழலாகிய
அண்ணாமலை அண்ணல்
தளராமுலை முறுவல்உமை
தலைவனடி சரணே.

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

விளா மரமாய் நின்றவனை மாய்த்த திருமாலும், தாமரை மலர்மேல் உறைந்து வேதத்தில் தோய்ந்த குறைவற்ற புகழையுடைய நான்முகனும் அளவிட முடியாதபடி நெருப்புப் பிழம்பாகிய அண்ணாமலையார், உண்ணாமலை அம்மையாகிய உமையின் தலைவன். அப்பெருமான் திருவடியையே சரணம் ஆகக் கொள்ள வேண்டும்.

வேர்வந்துற மாசுஊர்தர
வெயில்நின்று உழல்வாரும்
மார்பம்புதை மலிசீவரம்
மறையாவரு வாரும்
ஆரம்பர்தம் உரைகொள்ளன்மின்
அண்ணாமலை அண்ணல்
கூர்வெண்மழுப் படையான்நல்ல
கழல்சேர்வது குணமே.

வேர்வை உண்டாகி அதனால் அழுக்குத் தோய வெயிலில் திரிபவரும் மரவுரியை மார்பு மறையாதவாறு தரித்துக்கொண்டு வருபவர்களாய், முற்றிய தன்மையில்லாத நிலையில் உரை செய்பவர்களுடைய மொழிகளை ஏற்க வேண்டாம். மழுப்படை தாங்கியுள்ள அண்ணாமலையாரின் நல்ல கழலை எண்ணித் துதிப்பது குணம் தரும்.

வெம்புந்திய கதிரோன்ஒளி
விலகும்விரி சாரல்
அம்புந்திமூ எயில்எய்தவன்
அண்ணாமலை யதனைக்
கொம்புந்துவ குயில்ஆலுவ
குளிர்காழியுண் ஞான
சம்பந்தன தமிழ்வல்லவர்
அடிபேணுதல் தவமே.

திருச்சிற்றம்பலம்

வெம்மை தரும் கதிரவனுடைய ஒளியும் அற்றுப் போகுமாறு மேகத்தில் திரிந்த மூன்று கோட்டைகளைச் செயலிழக்கச் செய்தவன் ஈசன். அவ்வண்ணாமலையானைப் பாடிய, குளிர்ந்த சீர்காழியின் ஞானசம்பந்தன் தமிழாகிய இத் திருப்பதிகத்தை ஓதவல்லார்தம் திருவடி பேணுதல் பெருந்தவம் ஆகும்.

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

## திருக்கோலக்கா

**தள விளக்கம்:** சோழ நாட்டு – காவிரி வடகரைத் தலம். சீர்காழிக்கு அண்மையில் உள்ளது. அகத்தியர், கண்வர் வழிபட்டது.

**பதிகக் குறிப்பு:** திருஞானசம்பந்தர் இறைவனைத் தரிசித்துத் தமது திருக்கரத்தால் கைத்தாளமிட்டுப்பாட இறைவன் பொற்றாளம் நல்கினார். அம்பிகையின் அருளால் தாளத்தில் ஓசை எழுந்தது.

திருச்சிற்றம்பலம்

**மடையில் வாளை பாய மாதரார்**
**குடையும் பொய்கைக் கோலக் காவுளான்**
**சடையும் பிறையும் சாம்பல் பூச்சும்கீழ்**
**உடையும் கொண்ட உருவம் என்கொலோ.**

மடைகளில் வாளை மீன்கள் மகிழ்ச்சியால் துள்ளிக் குதிக்கவும், மாதர்கள் குளத்தில் குடைந்து நீராடி மகிழவும் விளங்குகின்றது கோலக்கா என்னும் ஊர். அங்கு எழுந்தருளியுள்ள ஈசன், சடைமுடியும், இளம் பிறைமதியும், திருநீற்றின் பூச்சும், கோவண ஆடையும் கொண்டுள்ள வடிவம் உடையவன். இது என்கொல்!

**பெண்தான் பாகமாகப் பிறைச் சென்னி**
**கொண்டான் கோலக் காவு கோயிலாக்**
**கண்டான் பாதம் கையால் கூப்பவே**
**உண்டான் நஞ்சை உலகம் உய்யவே.**

ஈசன், உமாதேவியைப் பாகமாகவும், வெண்பிறைச் சந்திரனைத் தலையிலும் கொண்டவன். அப்பெருமான், கோலக்காவை இருப்பிடமாகக் கொண்டான். தேவர்கள் அவன் திருவடியைக் கூப்பித் தொழுது வணங்க, உலக நன்மையைக் கருதி நஞ்சை உண்டு பாதுகாத்தான்.

**பூண்நல் பொறிகொள் அரவம் புன்சடை**
**கோணல் பிறையன் குழகன் கோலக்கா**
**மாணப் பாடி மறைவல் லானையே**
**பேணப் பறையும் பிணிக ளானவே.**

அரவத்தை ஆபரணமாகப் பூண்டு, சடை முடியில் வளைந்த பிறைச் சந்திரனைக் கொண்ட அழகனாகக் கோலக்காவில் விளங்கும் ஈசனைப் பெருமையோடு துதித்துப் பாடி, மறைவல்லவனாகிய அவனை நன்கு பூசித்துப் பேணுதல் செய்யப் பிணிகள் யாவும் நீங்கும்.

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

தழுக்கொள் பாவம் தளர வேண்டுவீர்
மழுக்கொள் செல்வன் மறிசேர் அங்கையான்
குழுக்கொள் பூதப் படையான் கோலக்கா
இழுக்கா வண்ணம் ஏத்தி வாழ்மினே.

வினையாகிய தழுவைக் கொள்ளும் பாவத்தைப் போக்க வேண்டும் என்று வேண்டுபவர்களே! திருக்கோலக்காவில் திருக்கரத்தில் மானும், மழுவும் ஏந்தி பூதப்படைகள் சூழ, விளங்கும் ஈசனை ஒழுக்கம் தவறாமல் துதித்து வாழ்வீர்களாக.

மயிலார் சாயல் மாதோர் பாகமா
எயிலார் சாய எரித்த எந்தைதன்
குயிலார் சோலைக் கோலக் காவையே
பயிலா நிற்கப் பறையும் பாவமே.

மயில்போன்ற வண்ணமிகு சாயலையுடைய உமாதேவியை ஒரு பாகமாக உடைய ஈசன், மும்மதில்களையுடைய கோட்டைகளை எரித்து அழித்தவன். அவன், குயில்கள் பாடிப் பொருந்தும் சோலை சூழ்ந்த கோலக்காவை நெஞ்சார நினைத்துப் போற்ற பாவம் விலகும்.

வெடிகொள் வினையை வீட்ட வேண்டுவீர்
கடிகொள் கொன்றை கலந்த சென்னியான்
கொடிகொள் விழவார் கோலக் காவுள்எம்
அடிகள் பாதம் அடைந்து வாழ்மினே.

கண்ணுக்குப் புலனாகாமல் திடீரென்று தாக்க வல்ல தீய வினைகளை அகற்ற வேண்டும் என்று வேண்டுபவர்களே! மணம் மிக்க கொன்றை மலரைச் சென்னியில் சூடிய எம் அடிகளாகிய, விழாக்கள் பெருகும் கோலக்கா மேவியவனை அடைந்து அவனது திருவடியைப் பணிந்து வாழ்வீர்களாக.

நிழலார் சோலை நீல வண்டினம்
குழலார் பண்செய் கோலக் காவுளான்
கழலால் மொய்த்த பாதம் கைகளால்
தொழலார் பக்கல் துயரம் இல்லையே.

நிழல் தரும் சோலைகளில் உள்ள மலர்களைச் சூழ்ந்து கரிய வண்டுகள் புல்லாங் குழலை நிகர்த்த பண் இசைத்துப் போற்ற, கோலக்காவுள் ஈசன் மேவினன். அவன் திருவடியைத் தொழுபவர்களுக்குத் துயரம் இல்லை.

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

எறிஆர் கடல்சூழ் இலங்கைக் கோன்தனை
முறிஆர் தடக்கை அடர்த்த மூர்த்திதன்
குறிஆர் பண்செய் கோலக் காவையே
நெறியால் தொழுவார் வினைகள் நீங்குமே.

அலைகளைக் கரையில் எறிந்து வீசும் கடல் சூழ்ந்த இலங்கைக் கோனாகிய இராவணனுடைய முறியும் தன்மையுடைய நீண்ட கைகளைத் துன்புறுத்தியவன் ஈசன். தன்னையே குறியாகக் கொண்டு பன்பாடிப் போற்றும் நெறியுடையவராய்க் கோலக்காவில் தொழுபவர்களுக்கு வினைகள் யாவும் நீங்கும்.

நாற்ற மலர்மேல் அயனும் நாகத்தில்
ஆற்றல் அணைமே லவனும் காண்கிலாக்
கூற்றம் உதைத்த குழகன் கோலக்கா
ஏற்றான் பாதம் ஏத்தி வாழ்மினே.

நறுமனம் கமழும் தாமரை மலர்மீது விளங்கும் பிரமனும், அரவணையில் பள்ளி கொண்டிருக்கும் திருமாலும், காண்கிலாதவனாகிக் காலனை உதைத்த அழகனான ஈசன் திருக்கோலக்காவை இடமாக உடையவன். அவனுடைய திருவடியை வணங்கி வாழ்வீர்களாக.

பெற்ற மாசு பிறக்கும் சமணரும்
உற்ற துவர்தோய் உருவி லாளரும்
குற்ற நெறியார் கொள்ளார் கோலக்காப்
பற்றிப் பரவப் பறையும் பாவமே.

சமணர் மற்றும் குற்றமுள்ள நெறியுடைய பிறர், நன்மையைக் கொள்ள மாட்டார்கள். கோலக்காவில் மேவும் ஈசன் மீது பற்றுக்கொண்டு வணங்கிப் போற்றுபவர்களின் பாவம் நீங்கும்.

நலங்கொள் காழி ஞானசம் பந்தன்
குலங்கொள் கோலக் காவு ளானையே
வலங்கொள் பாடல் வல்ல வாய்மையார்
உலங்கொள் வினைபோய் ஓங்கி வாழ்வரே.

திருச்சிற்றம்பலம்

ஞானப்பால் அருந்தி எல்லா நலன்களும் கைவரப்பெற்ற "ஞானசம்பந்தர், திருத் தொண்டர்தம் குலங்களைக் கொண்டு விளங்கும் திருக்கோலக்காவில் உறையும் ஈசனைப் போற்றி நன்மைகள் யாவும் கொண்டு விளங்கும்படி இசைத்த இத் திருப்பதிகத்தை ஓதுபவர்கள், பாறை போன்ற வினை யாவும் நீங்கி ஓங்கி வாழ்வார்கள்.

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

# திருவிடைமருதூர்

**தல விளக்கம் :** சோழ நாடு – காவிரி தென்கரைத் தலம். மத்தியார்ச்சுனம் என்று வழங்கப்பெறும். மருத வனம், சண்பகாரண்யம், சத்திபுரம் என்ற பெயர்களும் உண்டு. வரகுண பாண்டியனுக்குப் பிரமஹத்தி நீங்கிய தலம். உமாதேவி, விஷ்ணு, இலட்சுமி, சரஸ்வதி, வேதம் முதலானோர் பூசித்தது. பட்டினத்தார் மற்றும் யத்தரகிரியார் முக்தி பெற்ற தலம்.

**பதிகக் குறிப்பு :** ஞானசம்பந்தர் திருக்கோயிலை நோக்கிச் செல்லுங்கால் பாடியது.

திருச்சிற்றம்பலம்

**ஓடே கலன்உண் பதும்ஊ ரிடுபிச்சை**
**காடே இடமா வதுகல் ஆல்நிழற்கீழ்**
**வாடா முலைமங் கையும்தா னுமகிழ்ந்து**
**ஈடா உறைகின் றஇடை மருதுஈதோ.**

திருவோடு கொண்டு, ஊர் இடும் பிச்சை ஏற்று அதனையே உண்கலனாகக் கொண்டும், இடுகாட்டை இருப்பிடமாகவும், ஆல் நிழற் கீழ் குருமுகமாக இருந்தும் விளங்கும் ஈசன், உமாதேவியும் தானும் மகிழ்ந்து பெருமையாக உறைகின்ற இடைமருது இதுவோ!

**தடம்கொண் டதொர்தா மரைப்பொன் முடிதன்மேல்**
**குடம்கொண்டு அடியார் குளிர்நீர் சுமந்தாட்டப்**
**படம்கொண் டதொர்பாம்பு அரைஆர்த் தபரமன்**
**இடங்கொண்டு இருந்தான் தன்இடை மருதுஈதோ.**

பெருமை மிக்க தாமரை மலரைத் தரித்த திருமுடியின் மேல், குடத்தினால் நீர் முகந்து குளிர்ந்த நீரை ஆட்டி அபிஷேகம் செய்ய ஏற்று, அரவத்தை அரையில் கட்டிய பரமன் வீற்றிருக்கும் இடைமருது இதுவோ!

**வெண்கோ வணங்கொண்டு ஒருவெண் தலையேந்தி**
**அங்கோல் வளையா ளையொர்பா கம்அமர்ந்து**
**பொங்கா வருகா விரிக்கோ லக்கரைமேல்**
**எங்கோன் உறைகின் றஇடை மருதுஈதோ.**

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

ஒளிதிகழ் வேதத்தைக் கோவணமாகக் கொண்டு, பிரம கபாலத்தைக் கையில் ஏந்தி, அழகிய வளையல்களைத் திரட்சியாக உடைய உமாதேவியைப் பாகமாகக் கொண்டு இனிது இருந்து விளங்கும் ஈசன், பொங்கி வரும் காவிரியின் அழகிய கரையின்மேல் உறைகின்ற இடைமருது இதுவோ!

அந்தம் மறியா தஅரும் கலம்உந்திக்
கந்தம் கமழ்கா விரிக்கோ லக்கரைமேல்
வெந்த பொடிப்பூ சியவே தமுதல்வன்
எந்தை உறைகின் றஇடை மருதுஈதோ.

ஆதியும் அந்தமும் அறியப்பட முடியாதவன் ஈசன். அரியதாக விளங்கும் அணிகலன்களைத் தமது அலைகளால் உந்திக் கொண்டு வரும் காவிரியின் மணம் பொருந்தி வீசும் அழகிய கரையின் மேல் விளங்குபவன்; வெண்பொடி பூசிய வேதமுதல்வன். அவன் என் தந்தை. அப்பெருமான் உறைகின்ற இடைமருது இதுவோ!

வாசம் கமழ்மா மலர்ச்சோ லையில்வண்டே
தேசம் புகுந்துஈண் டியொர்செம் மையுடைத்தாய்ப்
பூசம் புகுந்துஆ டிப்பொலிந்து அழகாய
ஈசன் உறைகின் றஇடை மருதுஈதோ.

வாசம் கமழும் சிறப்பான மலர்களைக் கொண்டு விளங்கும் சோலையில் வண்டுகள் பெருமையுடையதாய் விளங்க, பூசத் திருநாளில் மகிழ்ந்து பொலிந்து ஈசன் உறைகின்ற இடைமருது இதுவோ!

வன்புற்று இளநா கம்அசைத்து அழகாக
என்பிற் பலமா லையும்பூண்டு எருதேறி
அன்பிற் பிரியா தவளோ டும்உடனாய்
இன்புற்று இருந்தான் தன்இடை மருதுஈதோ.

புற்றின்கண் விளங்கும் கொடிய நாகத்தைத் தரித்து, எலும்பு மாலையை அழகாகப் பூண்டு, இடப வாகனத்தில் ஏறி, அன்பு பிரியாதவளாகிய உமாதேவியோடு உடனாகி இருந்து இன்புற்று வீற்றிருக்கும் ஈசனுடைய இடைமருது இதுவோ!

தேக்கும் திமிலும் பலவும் சுமந்து உந்திப்
போக்கிப் புறம்பூ சல்அடிப் பவருமால்
ஆர்க்கும் திரைக்கா விரிக்கோ லக்கரைமேல்
ஏற்க இருந்தான் தன்இடை மருதுஈதோ.

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

காவிரி ஆறு தேக்கு, வேங்கை, பலா மரங்களை அடித்துக்கொண்டு வந்து கரையின் இரு பக்கங்களிலும் சேர்க்கும். அவ்வாறு நிகழ்வதால் உண்டாகும் ஒலி ஆர்க்க அழகிய கரைமேல் வீற்றிருக்கும் ஈசனுடைய இடைமருது இதுவோ!

பூவார் குழலார் அகில்கொண் டுபுகைப்ப
ஓவாது அடியார் அடியுள் குளிர்ந்துஏத்த
ஆவா அரக்கன் றனைஆற் றல்அழித்த
ஏவார் சிலையான் தன்இடை மருதுஈதோ.

மென்மையான மலர் சூடும் கூந்தலையுடைய மகளிர் அகிற் புகைகொண்டு விளங்க, அடியவர்கள் சற்றும் ஒய்தல் இன்றி இடையறாது, திருவடியை நெஞ்சில் இருத்தி மகிழ்ந்து ஏத்த, வரையெடுத்த இராவணனுடைய வலிமை யழித்த பெருமை மிக்க கயிலை நாதனின் இடைமருது இதுவோ!

முற்றா ததொர்பால் மதிசூ டுமுதல்வன்
நற்றா மரையா னொடுமால் நயந்துஏத்தப்
பொற்றோ ளியும்தா னும்பொலிந்து அழகாக
எற்றே உறைகின் றஇடை மருது ஈதோ.

இளவெண்மதி சூடும் முதல்வன், பிரமனும், திருமாலும் விரும்பி ஏத்தி வழிபட, உமாதேவியும் தானும் பொலிந்து எவ்வளவு அழகாக உறைகின்றான்! அந்த இடைமருது இதுவோ!

சிறுதே ரரும்சில் சமணும் புறம்கூற
நெறியே பலபத் தர்கள்கை தொழுதுஏத்த
வெறியா வருகா விரிக்கோ லக்கரைமேல்
எறிஆர் மழுவா ளன்இடை மருதுஈதோ.

சில சமணர்களும், பௌத்தர்களும் நன்னெறிக்குப் புறம்பானவற்றைக் கூற, நன்னெறியின் பாற்பட்டுப் பலவகையால் அன்பு செய்யும் பக்தர்கள் கைதொழுது வணங்கி நிற்க, ஆவேசத்தோடு நீர் பெருகி வரும் காவிரியின் கரையில் விளங்கும், எறிந்து தாக்கும் மழுப்படையை ஆளும் ஈசன் இடைமருது இதுவோ!

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

**கண்ணார் கமழ்க ழியுள்ஞா னசம்பந்தன்**
**எண்ணார் புகழ்எந் தைஇடை மருதின்மேல்**
**பண்ணோடு இசைபா டியபத்தும் வல்லார்கள்**
**விண்ணோர் உலகத் தினில்வீற்று இருப்பாரே.**

திருச்சிற்றம்பலம்

கண்ணுக்கும் கருத்துக்கும் பொருந்தி விளங்கும் காழியை உள்மகிழும் ஞானசம்பந்தன், எண்ணத்தில் மிளிரும் புகழ் மிக்க எந்தையாகிய ஈசன் இருக்கும் இடைமருதின் மேல், பண்ணோடு பாடிய இத் திருப்பதிகத்தை ஓதவல்லவர்கள் தேவர் உலகத்தில் வீற்றிருப்பர்!

## திருவாரூர்

**தலவிளக்கம்:** காவிரி தென்கரைத் தலம். பஞ்ச பூதத் தலங்களுள் இது பிருதிவித் தலம். பிறக்க முத்தி தரும் தலம். "திருவாரூர்ப் பிறந்தார்கள் எல்லார்க்கும் அடியேன்" என்பது சுந்தரமூர்த்தி சுவாமிகள் தேவாரம்.

பஞ்சபூதத் தலங்களுள் பிருதிவி (மண்) தலம். பரவையார் திருஅவதாரம் செய்த பதி. திருமகள், இராமர், மன்மதன் முதலானோர் வழிபட்ட திருத்தலம். மனுநீதி சோழனுக்கு அருள் செய்த பதி.

சுந்தரமூர்த்தி சுவாமிகளுக்காக இறைவன் பரவையார் இல்லம் நோக்கித் தூது சென்ற தலம். சுந்தரர், மணிமுத்தாற்றில் இட்ட பொன்னைத் திருவாரூர்க் குளத்தில் எடுக்கப்பெற்ற சிறப்புடைய தலம்.

திருச்சிற்றம்பலம்

**சித்தம் தெளிவீர்காள் அத்தன் ஆரூரைப்**
**பத்தி மலர்தூவ முத்தி யாகுமே.**

சித்தம் தெளிய விழையும் பெரியோர்களே! ஆரூர்த் தலைவனாகிய ஈசனைப் பக்தியால் போற்றி மலர் தூவி நின்று ஏத்தி வழிபடுவீர்களாக. அது முத்தியைத் தரவல்லது.

**பிறவி அறுப்பீர்காள் அறவன் ஆரூரை**
**மறவாது ஏத்துமின் துறவி யாகுமே.**

பிறவியை அறுக்க வேண்டும் என்று விழைபவர்களே! தரும நெறியில் விளங்கும் ஆரூர்ப் பெருமானை மறவாது ஏத்துவீர்களாக. அது துறவு நிலையைத் தரும்.

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

துன்பம் துடைப்பீர்காள் அன்பன் அணிஆரூர்
நன்பொன் மலர்தூவ இன்பம் ஆகுமே.

துன்பம் தீர வேண்டும் எனக் கருதுபவர்களே! அழகிய ஆரூரில் விளங்கும் பெருமான் மிக்க அன்புடையவன், நல்ல பொன் போன்ற மலர்களால் தூவித் தொழுமின்கள். அது இன்பத்தை உண்டாக்கும்.

உய்யல் உறுவீர்காள் ஐயன் ஆரூரைக்
கையி னால்தொழ நையும் வினைதானே.

உய்ய வேண்டும் என நினைப்பவர்களே! தலைவனாகிய ஆரூர்மேவும் செல்வனைக் கையினால் கூப்பித் தொழுவீராக. வினையானது நைந்து அழியும். உய்தி பெற்று விடுவீர்கள் என்றவாறு.

பிண்டம் அறுப்பீர்காள் அண்டன் ஆரூரைக்
கண்டு மலர்தூவ விண்டு வினைபோமே.

பிறவியைத் தரக்கூடிய வினையிலிருந்து மீள வேண்டும் என்று கருதுபவர்களே! அண்டங்களுக்குத் தலைவனும் ஆகி, தானே முற்றுமாகவும் இருக்கும் ஆரூர்ப் பெருமானைக் கண்டு மலர் தூவிப் போற்றுவீராக. உங்கள் வினை யாவும் மாய்ந்து போகும்.

பாசம் அறுப்பீர்காள் ஈசன் அணிஆரூர்
வாச மலர்தூவ நேசம் ஆகுமே.

பாசம் அறுத்து ஒதுக்க வேண்டும் என்று நினைப்பவர்களே! அணிமிகும் ஆரூரின் ஈசன் திருவடியில் வாச மலர் தூவிப் பணிவீர்களாக. அது உலக பாசத்தைப் போக்கி ஈசன் மீது நேசம் கொள்ளுமாறு செய்யும்.

வெய்ய வினைதீர ஐயன்அணி ஆரூர்
செய்ய மலர்தூவ வையம் உமதாமே.

கொடிய வினைகள் தீருவதற்கு, அழகிய ஆரூரின் தலைவனாகிய, ஈசனின் சேவடியைச் செம்மையான மலர்களால் தூவிப் போற்ற வேண்டும். அவ்வாறு செய்தால் இவ்வுலகம் உம்முடையதாகும்.

அரக்கன் ஆண்மையை நெருக்கி னான்ஆரூர்
கரத்தி னால்தொழத் திருத்தம் ஆகுமே.

அரக்கனாகிய இராவணனுடைய வன்மைமிக்க ஆணவத்தை அடக்கிய ஆரூரின் நாதனைக் கரத்தினால் தொழுது போற்ற, ஆணவ மலம் முதலான மலத் தொகுதிகள் களையப்பெற்று திருத்தம் பெறும்.

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

துள்ளும் இருவர்க்கும் வள்ளல் ஆரூரை
உள்ளும் அவர்தம் மேல் விள்ளும் வினைதானே.

தாமே பெரியவர் என்று தருக்கிய திருமால், பிரமன் ஆகியோருக்குக் காண்பரிதாய் விளங்கிப் பின்னர் அருள் வழங்கிய வள்ளற் பெருமானாகிய, ஆரூரில் விளங்கும் ஈசன் திருவடியைத் தியானிக்கும் உள்ளம் உடையவர்களுக்கு வினையானது நிற்காது.

கடுக்கொள் சீவரை அடக்கி னான்ஆரூர்
எடுத்து வாழ்த்துவார் விடுப்பர் வேட்கையே.

தீய எண்ணங்களையுடைய சீவர்களை அடக்கிய ஆரூர் ஈசனை வாழ்த்துபவர்கள் பற்றற்றவர் ஆவார்கள்.

சீரூர் சம்பந்தன் ஆரூரைச் சொன்ன
பாரூர் பாடலார் பேரார் இன்பமே.

சிறப்புப் பொருந்திய ஞானசம்பந்தன் ஆரூரைச் சொன்ன, பாரில் பரவி விளங்கும் இத்திருப்பதிகத்தைப் பேணுபவர்கள், பெருமை மிக்க இன்பத்தில் திளைப்பார்கள். பேரின்பம் அடைவர்.

## திருவீழிமிழலை

**தலவிளக்கம்:** சோழநாட்டு தென்கரைத் தலம். இறைவன் திருமண கோலத்துடன் இருக்கும் தலம். திருமால் பூசித்த தலம்.

**பதிககுறிப்பு:** திருஞானசம்பந்தர், திருநாவுக்கரசருடன் தலயாத்திரை மேவி, திருவீழிமிழலையில் இருந்த காலத்தில் பெரும்பஞ்சம் ஏற்பட்டது. அடியவர்கள் பசியால் துன்புற்றனர். அது கண்ட இருபெரும் சமயக்குரவர்களும் ஈசனை நினைந்து துயில் கொள்ளலாயினர், ஈசன் கனவில் தோன்றிப் பஞ்சம் தீரும்வரையில் படிக்காசு அளிக்கின்றோம் என்று அருள் செய்தனர். அவ்வாறே பீடத்தின் கிழக்குப் பகுதியில் ஒரு பொற்காசும், மேற்குப் பகுதியில் ஒரு பொற்காசும் ஆக இரு காசுகள் அளித்தனர். திருநாவுக்கரசர் திருமடத்தில் காலம் தாழ்த்தாது உணவு படைக்கப்படுதலும் திருநானசம்பந்தர் திருமடத்தில் மாற்றுக் குறைந்த காசு பெற்றமையால் தாழ்த்தி உணவு வழங்கப்படுதலும் கண்டு ஞானசம்பந்தர், மாற்றுக் குறையாத நல்ல பொற்காசு அளித்துருளுமாறு வேண்டினார். அது பற்றி இத்திருப்பதிகம் எழுந்தது.

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

திருச்சிற்றம்பலம்

வாசிதீரவே காசு நல்குவீர்
மாசின் மிழலையீர் ஏசல் இல்லையே,

குற்றமற்ற மிழலையில் வீற்றிருக்கும் பெருமானே! வேறுபாடு இல்லாது இருப்பதற்கு உரிய காசு நல்குவீராக. அவ்வாறு நல்கினால் நிந்தனை சொல்வதற்கு யாதும் இல்லை.

இறைவர் ஆயினீர் மறைகொள் மிழலையீர்
கறைகொள் காசினை முறைமை நல்குமே.

வேதத்தைக் கொண்டுள்ள மிழலையின் பெருமானே! இறைவராக உள்ள நீவிர், கறை கொண்ட காசினை வழங்குதலை ஒழித்து, முறைமையான நல்ல காசினை நல்குவீராக.

செய்யமேனியீர் மெய்கொள் மிழலையீர்
பைகொள் அரவினீர் உய்ய நல்குமே.

செம்மேனியராக, மெய்ம்மை கொண்டு மிழலையில் விளங்கும் பெருமானே! படம் கொண்ட பாம்பினை உடையவரே! நாங்கள் உய்யுமாறு நல்ல காசு தந்தருள்வீராக.

நீறு பூசினீர் ஏறது ஏறினீர்
கூறு மிழலையீர் பேறும் அருளுமே.

திருநீறு மெய்யில் பூசினீர், இடபவாகனத்தில் ஏறினீர், மிழலை நகரின் அங்கம் உடையீர், நற்பேறும் அருள்வீராக.

காமன் வேவஓர் தூமக் கண்ணினீர்
நாம மிழலையீர் சேம நல்குமே.

புகழ் மிக்க மிழலையில் உள்ள பெருமானே! மன்மதன் எரியுமாறு நெருப்புக் கண் உடையவர் ஆயினீர்; பாதுகாப்பும் நலமும் புரிவீராக.

பிணிகொள் சடையினீர் மணிகொள் மிடறினீர்
அணிகொள் மிழலையீர் பணிகொண்டு அருளுமே.

பிணித்துக் கட்டிய சடையை உடைய பெருமானே! நீலகண்டத்தை உடைய நாதனே! அழகிய மிழலையில் வீற்றிருப்பவரே! எமது பணியை ஏற்றுக் கொண்டு அருள் புரிவீராக.

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

**மங்கை பங்கினீர் துங்க மிழலையீர்**
**கங்கை முடியினீர் சங்கை தவிர்மினே.**

உமாதேவியை ஒரு பாகத்தில் கொண்டுள்ள ஈசனே! சாந்தமான மிழலையின் நாதனே!கங்கையைத் தரித்த முடியுடையவரே! எங்கள் ஐயத்தைப் போக்கிக் குற்றமற்ற காசு தரவீராக.

**அரக்க னெரிதர இரக்கம் எயிதினீர்**
**பரக்கு மிழலையீர் கரக்கை தவிர்மினே.**

அரக்கனாகிய இராவணன், குற்றம் செய்தமையால் நெரிக்கப்பட்டு வருந்தினாலும், அவன் அழுகை கேட்டு இரக்கம் கொண்டு அருள்புரிந்த பெருமானே! புகழ்பரவும் மிழலையில் வீற்றிருப்பவரே! வஞ்சகம் தவிர்த்து நல்ல பொற்காசு தந்தருள் வீராக.

**அயனு மாலுமாய் முயலு முடியி னீர்**
**இயலு மிழலையீர் பயனும் அருளுமே.**

பிரமனும் திருமாலும் முயன்று தேடிய தலைமை உடையவரே! இயல்பின் மிக்க மிழலையில் வீற்றிருப்பவரே! பயனை அருள்புரிவீராக.

**பறிகொள் தலையினார் அறிவது அறிகிலார்**
**வெறிகொள் மிழலையீர் பிறிவது அரியதே.**

மணம் கொள் மிழலையின் ஈசனே! சமணர்கள், அறியும் பொருளை அறிந்திடாது நிற்க வேறு உரைப்பது அரியதாகும்.

**காழிமாநகர் வாழி சம்பந்தன்**
**வீழி மிழலைமேல் தாழு மொழிகளே**

திருச்சிற்றம்பலம்

காழியின் ஞானசம்பந்தன் வீழிமிழலை மேல் பதியக் கூறிய பதிகத்தை உரைப்பவர்கள் மேலாவார்கள்.

In Public domain. Digitization Muthulakshmi Research Academy



## திருப்புள்ளிருக்குவேளூர்

தல விளக்கம்: காவிரி வடகரைத் தலம். 16ஆவது திருத்தலம். திருஞானசம்பந்தர், திருநாவுக்கரசர் பாடல் பெற்றது. புள் (சம்பாதி; சடாயு) இருக்கு (வேதம்), வேள் (முருகன்), ஊர் (சூரியன்) வழிபட்டது. வைத்தீஸ்வரன் கோயில் என வழங்கப்படுகிறது. அம்பிகை, அங்காரக பகவான், இராமர், இலக்குவர் பூசித்தது.

இங்கு அங்காரகனுக்குப் பெருமை. முருகப் பெருமான் விசேடம். முத்துக்குமாரசாமி என்னும் திருநாமம் கொண்டு விளங்கும் தலம். பிணி தீர்க்கும் திருத்தலம்.

திருச்சிற்றம்பலம்

கள்ளார்ந்த பூங்கொன்றை
மதமத்தம் கதிர்மதியும்
உள்ளார்ந்த சடைமுடியெம்
பெருமானார் உறையும் இடம்
தள்ளாய சம்பாதி
சடாயுயென்பார் தாமிருவர்
புள்ளானார்க்கு அரையன்இடம்
புள்ளிருக்கு வேளூரே.

தேன் விளங்கும் பூங்கொன்றை, ஊமத்த மலர்களும், ஒளிக்கதிர் வீசும் சந்திரனும் பொருந்திய சடைமுடியுடைய எம்பெருமானாகிய ஈசன் உறையும் இடம், சம்பாதி, சடாயு என்னும் இரு பறவைப் பிறப்புடைய இருவரும் வழிபாடு செய்த புள்ளிருக்கு வேளூர் ஆகும்.

தையலார் ஒருபாகம்
சடைமேலாள் அவளோடும்
ஐயந்தேர்ந்து உழல்வாரோர்
அந்தணனார் உறையுமிடம்
மெய்சொல்லா இராவணனை
மேலோடி ஈடழித்துப்
பொய்சொல்லாது உயிர்போனான்
புள்ளிருக்கு வேளூரே.

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

தையல் நாயகி என்னும் திருநாமம் தாங்கிய தேவி (திருத்தலத்தில் எழுந்தருளியுள்ள அம்பிகையின் பெயர்) ஒரு பாகத்தில் உடனாகி விளங்க, கங்கையைச் சடையில் தரித்து, பிரம கபாலம் ஏந்திப் பிச்சை எடுத்தலைத் தேர்ந்து திரிந்தவரும் வேதியரும் ஆகிய ஈசன் உறையும் இடம், மெய் புகலாத இராவணன் சீதையைக் கவர்ந்து சென்றபோது, அவன்மேல் பாய்ந்து செற்றுப் பெருமையை அழித்துப் பொய் புகலாது உயிர் நீத்த சடாயு போற்றி வழிபட்ட புள்ளிருக்கு வேளூர் ஆகும்.

வாசநலம் செய்திமையோர்
நாடோறு மலர்தூவ
ஈசன்எம் பெருமானார்
இனிதாக உறையும்இடம்
யோசனைபோய்ப் பூக் கொணர்ந்துஅங்கு
ஒருநாளும் ஒழியாமே
பூசனைசெய்து இனிதிருந்தான்
புள்ளிருக்கு வேளூரே.

தேவர்கள் எல்லாம் நாள்தோறும் மலர் தூவி அர்ச்சனை செய்ய, எம்பெருமானாகிய ஈசன் இனிதாக உறையும் இடம் ஒரு யோசனை தொலைவில் உள்ள காவிரிப் பூம்பட்டினத்தில் இருந்து தினந்தோறும் பூக்களைக் கொண்டு வந்து சம்பாதி என்னும் புள், பூசனை செய்த புள்ளிக்கு வேளூர் ஆகும்.

மாகாயம் பெரியதொரு
மானுரிதோல் உடையாடை
ஏகாய மிட்டுகந்த
எரியாடி உறையுமிடம்
ஆகாயம் தேரோடும்
இராவணனை அமரின்கண்
போகாமே பொருதழித்தான்
புள்ளிருக்கு வேளூரே.

சிறப்பான திருமேனியில் மான் தோலை உடையாகக் கொண்டு தடையில்லாதபடி நெருப்பேந்தி மயானத்தில் நடம்புரிந்த ஈசன் உறையும் இடம், புட்பக விமானத்தில் ஆகாய வழியாகச் சென்ற இராவணனுடைய பலத்தை அழித்த சடாயு வழிபாடு செய்த புள்ளிருக்கு வேளூரே ஆகும்.

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

கீதத்தை மிகப்பாடும்
அடியார்கள் குடியாகப்
பாதத்தைத் தொழநின்ற
பரஞ்சோதி பயிலுமிடம்
வேதத்தின் மந்திரத்தால்
வெண் மணலே சிவமாகப்
போதத்தால் வழிபட்டான்
புள்ளிருக்கு வேளூரே.

பக்திப் பாடல்களைப் பாடி பாதத்தையே இருப்பிடமாகக் கொண்டு போற்றும் அடியவர்கள் தொழுது வாழ்த்தும் பரஞ்சோதியாகிய ஈசன் விளங்கும் இடம், மணலைச் சிவலிங்கமாக அமைத்து சம்பாதி வேதமந்திரம் கொண்டு வழிபட்ட புள்ளிருக்கு வேளூர் ஆகும்.

திறங்கொண்ட அடியார்மேல்
தீவினை நோய் வாராமே
அறங்கொண்டு சிவதன்மம்
உரைத்தபிரான் அமருமிடம்
மறங்கொண்டங்கு இராவணன்றன்
வலிகருதி வந்தானைப்
புறங்கண்ட சடாயுஎன்பான்
புள்ளிருக்கு வேளூரே.

உறுதியான பற்றுக்கொண்ட அடியவர் மேல் தீவினையானது வாராதவாறு காத்தருள் புரிந்தும், சனகாதி முனிவர்களுக்குக் கல்லால் மர நிழலில் வீற்றிருந்து அறம் உரைத்து அருள் புரிந்தும் விளங்கும் ஈசன் அமரும் இடம், அறநெறி நீத்து மறங்கொண்ட இராவணனைப் புறங்காணுமாறு செய்த சடாயு என்பவன் பூசித்து விளங்கும் புள்ளிருக்கு வேளூர் ஆகும்.

அத்தியினீர் உரிமூடி
அழகாக அனலேந்திப்
பித்தரைப் போல் பலிதிரியும்
பெருமானார் பேணுமிடம்
பத்தியினால் வழிபட்டுப்
பலகாலந் தவம்செய்து
புத்தியொன்ற வைத்துகந்தான்
புள்ளிருக்கு வேளூரே.

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

யானையின் தோலை உரித்தும், நெருப்பினை அழகு பொலியக் கரத்தில் ஏந்தியும், பித்தரைப் போன்று கபாலம் ஏந்திப் பலி கொண்டு பெருமான் விரும்பும் இடம், சம்பாதி என்னும் பறவை பக்தியுடன் வழிபட்டும் தவம் செய்தும் ஒன்றி விளங்கும் புள்ளிருக்கு வேளூர் ஆகும்.

பண்ணொன்ற இசைபாடும்
அடியார்கள் குடியாக
மண்ணின்றி விண்கொடுக்கு
மணிகண்டன் மருவுமிடம்
எண்ணின்றி முக்கோடி
வாணாளது உடையானைப்
புண்ணொன்றப் பொருதழித்தான்
புள்ளிருக்கு வேளூரே.

பண் ஒன்றி விளங்குமாறு இறைவன் புகழ் பாடல்களைப் பாடும் அடியவர்கள். நிலைத்து மகிழ்வதற்குப் பூவுலகத்தில் விளங்கும் இம்மை நலன் மட்டுமன்றி, முத்திப் பேற்றையும் கொடுத்து அருள்கின்ற மணிகண்டனாகிய ஈசன் மருவி விளங்கும் இடம், எண்ணும் அளவின்றி முக்கோடி ஆண்டுகள் வாழ் நாளுடைய இராவணனுடைய மேனி புண் கொண்டு துன்புறுமாறு செய்து சடாயு பூசித்து விளங்கும் புள்ளிருக்கு வேளூர் ஆகும்.

வேதித்தார் புரமூன்றும்
வெங்கணையாய் வெந்தவியச்
சாதித்த வில்லாளி
கண்ணாளன் சாருமிடம்
ஆதித்தன் மகன்என்ன
அகல்ஞாலத் தவரோடும்
போதித்த சடாயுஎன்பான்
புள்ளிருக்கு வேளூரே.

பகை கொண்ட முப்புர அசுரர்களின் கோட்டைகளை வலிமையான கணை தொடுத்து வெந்து எரிந்து சாம்பலாகுமாறு செய்த, மேரு மலையை வில்லாக உடைய, நெற்றிக்கண் கொண்ட ஈசன், சார்ந்து விளங்கும் இடம், ஆதித்தன் மக்களாகிய சம்பாதி, சடாயு இருவரும் உலகில் போற்றி வழிபட்ட, புள்ளிருக்கு வேளூர் ஆகும்.

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

கடுத்துவரும் கங்கைதனைக்
கமழ்சடையொன் றாடாமே
தடுத்தவர் எம் பெருமானார்
தாம்இனிதாய் உறையுமிடம்
விடைத்துவரும் இலங்கைக்கோன்
மலங்கச் சென்று இராமற்காப்
புடைத்தவனைப் பொருதழித்தான்
புள்ளிருக்கு வேளூரே.

சீறிப் பாய்து வரும் கங்கையை, கமழும் சடையில் தளும்பிச் செல்லாதவாறு தடுத்துப் பொருத்திய எம்பெருமானாகிய ஈசன், இனிய பாங்கில் உறையும் இடம், குற்றப்படுத்திய இராவணன் கலங்குமாறு, இராமபிரானுக்காகப் போர் செய்து புடைத்தவனாகிய சடாயு வணங்கி வழிபட்ட புள்ளிருக்கு வேளூர் ஆகும்.

செடியாய உடல் தீர்ப்பான்
தீவினைக்கோர் மருந்தாவான்
பொடியாடிக்கு அடிமை செய்த
புள்ளிருக்கு வேளூரைக்
கடியார்ந்த பொழிற்காழிக்
கவுணியன்சம் பந்தன்சொல்
மடியாது சொல்லவல்லார்க்கு
இல்லையா மறுபிறப்பே.

திருச்சிற்றம்பலம்

குற்றம் நேரும் தன்மையுடைய உடலைக் கொள்கின்ற பிறவியைக் களைந்தும், உடலில் தீவினையால் உண்டாகும் பிணியைத் தீர்க்கும் மருந்தாகவும் விளங்குபவன், இத் திருத்தலத்தில் எழுந்தருளியுள்ள வைத்தியநாதன். அப்பெருமான், திருநீற்றினை நன்கு மகிழ்ந்து பூசியவன். அத்தகைய பரமனுக்கு, அடிமை செய்து வணங்கிப் போற்றிய புள்ளிருக்கு வேளூரை, மணம் கமழும் பொழில் திகழும் சீர்காழியின் கவுணியர் கோத்திரத்தின் மரபில் திகழும் ஞானசம்பந்தர் சொல்லிய, இத் திருப்பதிகத்தை விருப்பத்துடன் சொல்பவர்களுக்கு மறுபிறப்பு இல்லை.

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

## கோளாறு திருபதிகம்

பதிகக் குறிப்பு: திருக்கதவம் திறப்பித்தும் பின்னர் அடைத்தும் திருவருட் செயலைத் திருமறைக்காட்டில் திருநாவுக்கரசரும் திருஞானசம்பந்தரும் நிகழ்த்தினர். இரு பெரும் சமயக் குரவர்களும் அத் திருத்தலத்தில் வைகும் நாளில், பாண்டிய மன்னன் சைவத்தை விட்ட கன்று, சித்தம் செல்லாமையைக் கண்டு, பாண்டிமா தேவியாரும், அரசனின் அமைச்சராகிய குலச்சிறையாரும் தூதுவர் வாயிலாகச் செய்தியினை விண்ணப்பித்துத் திருஞான சம்பந்தரைப் பாண்டிய நாட்டிற்கு வருகை புரியுமாறு அழைப்பு விடுத்தனர். அஞ்ஞான்று நாளும் கோளும் பொருந்தாத நிலை கண்டு, நாவரசர் எடுத்துரைக்கப் புகலி வேந்தர், "பரசுவது எம் பெருமான் கழல்கள் என்றால் எழுதணையாது" எனப் பகர்ந்து இத் திருப்பதிகத்தை அருளிச் செய்யலானார்.

திருச்சிற்றம்பலம்

**வேயுறு தோளி பங்கன் விடமுண்டகண்டன்**
**மிகநல்ல வீணை தடவி**
**மாசறு திங்கள் கங்கை முடிமேல் அணிந்தென்**
**உளமே புகுந்த அதனால்**
**ஞாயிறு திங்கள் செவ்வாய் புதன் வியாழம்வெள்ளி**
**சனிபாம்பி ரண்டும் உடனே**
**ஆசறு நல்ல நல்ல அவைநல்ல நல்ல**
**அடியாரவர்க்கு மிகவே.**

மூங்கிலை ஒத்த மென்மையான தோள்களையுடைய உமாதேவியைப் பாகம் கொண்டுள்ள ஈசன், விடத்தை உண்டு, தேக்கிய கண்டத்தனாய், மிக நல்ல வீணையை மீட்டும் எழில் இசை காண்பவனாய், மாசில்லாத சந்திரனும் கங்கையும் முடியின் மீது அணிந்து எனது உள்ளத்தில் புகுந்துள்ளனன். அதனால் நவக்கிரகங்களாகிய சூரியன், சந்திரன், அங்காரகன், புதன், குரு, சுக்கிரன், சனி, ராகு, கேது ஆகியவற்றால் உண்டாகும் தீமைகள் இல்லை. அவை குற்றமற்ற நல்ல பயன்களைத் தரவல்லன. ஈசனின் அடியவர்களுக்கு அவை மிகுதியாக, விளங்கும் நல்லவையே தரக்கூடியவை ஆகும்.

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

என்பொடு கொம்பொடாமை இவைமார்பு இலங்க
எருதேறி ஏழை யுடனே
பொன்பொதி மத்த மாலை புனல்சூடி வந்தென்
உளமே புகுந்த அதனால்
ஒன்பது ஒன்றோடு ஏழு பதினெட்டோடு ஆறும்
உடனாய நாள்கள் அவைதாம்
அன்பொடு நல்லதல்ல அவைநல்லநல்ல
அடியார் அவர்க்கு மிகவே.

எலும்பு, பன்றிக் கொம்பு, ஆமை ஒடு ஆகியவற்றைச் சேர்த்து மார்பில் ஆரமாகத் திகழ இடப வாகனத்தில் ஏறி, உமா தேவியை உடனாகக் கொண்டு, பொன் போன்ற கொன்றை மாலையும், ஊமத்த மலரும், கங்கையும் சூடி, என் உள்ளத்தில் வந்து புகுந்தனன் ஈசன். அதனால், ஆயில்யம், மகம், விசாகம், கேட்டை, திருவாதிரை மற்ற நாள்களாக உள்ள பரணி, கிருத்திகை, பூரம், சித்திரை, சுவாதி, பூராடம், புரட்டாதி ஆகியவனவும் அன்புடன் நல்லதாகி, அடியவர்களுக்கு மிகவும் நல்லதாக அமையும்.

உருவளர்பவளமேனி ஒளிநீறு அணிந்து
உமையோடும் வெள்ளை விடைமேல்
முருகலர் கொன்றை திங்கள் முடிமேல் அணிந்தென்
உளமே புகுந்த அதனால்
திருமகள் கலையதூர்தி செயமாது பூமி
திசைதெய்வம் ஆன பலவும்
அருநெறி நல்லநல்ல அவை நல்லநல்ல
அடியார் அவர்க்கு மிகவே.

பவளம் போன்ற அழகு திகழும் திருமேனியில் ஒளிரும் திருநீறு அணிந்து, உமாதேவி உடனாக விளங்க, வெண்மையான இடப வாகனத்தில் ஏறி, அழகிய கொன்றை மலரும் திங்களும் முடியின் மீது தரித்து, என் உள்ளத்தில் ஈசன் புகுந்தனன். அதனால், திருமகள், துர்க்கை, ஜெயமகள், அட்டதிக்குப் பாலகர்கள் மற்றும் பூமியை இயங்கச் செய்யும் அதிதேவதை தெய்வங்கள், அரியதாகிய செல்வங்கள் யாவும் நன்மை செய்யவல்லன. அடியவர்களுக்கு அவை மிக்க நன்மையாய் விளங்குவன.

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

மதிநுதல் மங்கையோடு வடபால் இருந்து
மறையோதும் எங்கள் பரமன்
நதியொடு கொன் றைமாலை முடிமேல் அணிந்தேன்
உளமே புகுந்த அதனால்
கொதியுறு காலன்அங்கி நமனோடு தூதர்
கொடு நோய்க ளான பலவும்
அதிகுணம் நல்லநல்ல அவை நல்லநல்ல
அடியார் அவர்க்கு மிகவே.

திருமுடியில் சந்திரனைச் சூடி. உமா தேவியை உடனாகக் கொண்டு, கல்லால மரத்தின் கீழ் இருந்து, சனகாதி முனிவர்களுக்கு அறப்பொருள்களை உபதேசித்த எங்கள் பரமன், கங்கை தரித்துக் கொன்றை மாலையை முடியின்மேல் அணிந்து என் உள்ளத்தில் புகுந்தனன். அதனால் சினம் மிகுந்து உறுகின்ற காலன், அக்கினி, இயமன், இயமனுடைய தூதர்கள், கொடிய நோய்கள் முதலான பலவும் நற்குணத்தின் வயப்பட்டு நல்லனவாகும். அவை அடியவர்களுக்கு மிக்க நல்லனவாகும்.

நஞ்சிணி கண்டன் எந்தை மடவாள் தனோடும்
விடையேறு நங்கள் பரமன்
துஞ்சிருள் வன்னி கொன்றை முடிமேலணிந்தென்
உளமே புகுந்த அதனால்
வெஞ்சின அவுணரோடும் உருமிடியும்மின்னும்
மிகையான பூதம் அவையும்
அஞ்சிடும் நல்ல நல்ல அவை நல்ல நல்ல
அடியார் அவர்க்கு மிகவே.

நஞ்சினை அணிபோன்று கண்டத்தில் கொண்ட என் தந்தை உமாதேவியோடு இடப வாகனத்தில் வீற்றிருக்கும் எங்கள் பரமன் ஆவார். அப்பெருமான், கரும்பச்சை வண்ணத்தையுடைய வன்னி, கொன்றை மலர் ஆகியவற்றை முடியின் மீது அணிந்து என் உள்ளம் புகுந்தனன். அதனால், கொடிய சினத்தையுடைய அசுரர்களும், வறுமையாகிய இல்லாமை என்னும் கொடுமையும், மின்னல் போன்று தோன்றி மிகைகொண்டு செய்யும் பூதங்களும் எமக்குத் தீயது செய்ய அஞ்சும்; அது நன்மையாக உள்ளவற்றைப் புரியும். அடியவர்களுக்கு அவை மிகவும் நன்மையாகும்.

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

வாள்வரிய தளதாடை வரிகோவ ணத்தர்
மடவாள்த னோடும் உடனாய்
நாள்மலர் வன்னிகொன்றை நதிசூடி வந்தென்
உளமே புகுந்த அதனால்
கோளரி உழுவையோடு கொலையானைகேழல்
கொடு நாக மோடு கரடி
ஆளரி நல்ல நல்ல அவை நல்ல நல்ல
அடியார் அவர்க்கு மிகவே.

ஒளிமிக்க வரிகளையுடைய புலியின் தோலை ஆடையாகக் கொண்டு, வரித்த கோவணத்தை உடைய ஈசன், உமையவளைப் பாகங் கொண்டு, வன்னிப் பத்திரம், கொன்றை மலர், கங்கை ஆகியவற்றைத் தரித்து என் உள்ளத்தில் புகுந்தனன். அதனால், சிங்கம், புலி, கொலை யானை, பன்றி, கொடிய நாகம், கரடி ஆகியன யாவும் நெருக்கமாக உள்ள துணையாள் போன்று, நல்லதானவற்றைச் செய்யவல்லது. அவை அடியவர்களுக்கு மிகுந்த நல்லவையாய் விளங்கும்.

செப்பிளமுலைநன் மங்கை ஒருபாக மாக
விடையேறு செல்வன் அடைவார்
ஒப்பிள மதியும் அப்புமுடி மேல் அணிந்தென்
உளமே புகுந்த அதனால்
வெப்பொடு குளிரும்வாத மிகையான பித்தும்
வினையான வந்து நலியா
அப்படி நல்ல நல்ல அவை நல்ல நல்ல
அடியார் அவர்க்கு மிகவே.

உமாதேவியை ஒரு பாகமாகக் கொண்டு இடப வாகனம் ஏறும் செல்வனாகிய ஈசன், அடைக்கலம் ஆகிய இளைய பிறைச் சந்திரனும் கங்கையும் முடியின் மீது அணிந்து என் உள்ளத்தில் புகுந்தனன். அதனால், வெம்மையுடைய குளிர், வாதம், பித்தம் முதலான நோய்களைத் தரும் வாத பித்த சிலேத்தும நாடிகள், தமது இயல்பிலிருந்து திரியாமல், அத்தகைய நன்மை விளைவிக்கும், அடியவர்களுக்கு அவை மிகுந்த நன்மையினைச் செய்யும்.

வேள்பட விழிசெய்து அன்று விடைமேல் இருந்து
மடவாள் தனோடும் உடனாய்
வாள்மதி வன்னிகொன்றை மலர்சூடி வந்தென்

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

உளமே புகுந்த் அதனால்
ஏழ்கடல் சூழ்இலங்கை அரையன்ற னோடும்
இடரான வந்து நலியா
ஆழ்கடல் நல்ல நல்ல அவை நல்ல நல்ல
அடியார் அவர்க்கு மிகவே.

மன்மதனை நெற்றிக்கண்ணால் நோக்கி, இடப வாகனத்தில் உமாதேவியுடன் வீற்றிருந்து ஒளி மிக்க சந்திரனும் வன்னி, கொன்றை மலர் சூடி வந்து, ஈசன் என் உள்ளம் புகுந்தனன். அதனால், கடல் சூழ்ந்த இலங்கையின் வேந்தனாகிய இராவணனோடும், சூழ வரும் இடர் ஏதும், வந்து நலியுறச் செய்யாது. ஆழ்கடலும் நல்லதாய் அமையும். அவை அடியவர்களுக்கு மிகவும் நல்லதாகும்.

பலபல வேட மாகும் பரனாரி பாகன்
பசுவேறும் எங்கள் பரமன்
சலமகளோடு எருக்கு முடிமேல் அணிந்தென்
உளமே புகுந்த அதனால்
மலர்மிசை யோனு மாலுமறையோடு தேவர்
வருகால மான பலவும்
அலைகடல் மேரு நல்ல அவைநல்ல நல்ல
அடியார் அவர்க்கு மிகவே.

பலவாகிய திருவடிவங்களில் தோன்றிய பரமன் உமாதேவியைப் பாகமாக உடையவன். அப்பெருமான் இடப வாகனத்தில் வீற்றிருக்கும் எங்கள் பரமன். அவன் கங்கையினையும், எருக்கும் பூவினையும் முடியின்மேல் அணிந்து என் உள்ளம் புகுந்தனன். அதனால், தாமரை மலர் மீது விளங்கும் பிரமனும், திருமாலும், வேதங்களும், தேவர்களும் மற்றும் வருகின்ற காலங்கள் பலவும், அலை கொள்ளும் கடல், நிலைத்து மேவும் மேருமலை என யாவும், நல்லனவே ஆகும். அடியவர்களுக்கு அவை மிகவும் நன்மை உடையனவாகும்.

கொத்தலர் குழலியோடு விசையற்கு நல்கு
குணமாய வேட விகிர்தன்
மத்தமு மதியு நாக முடிமேல் அணிந்தென்
உளமே புகுந்த அதனால்
புத்தரொடு அமணை வாதில் அழிவிக்கும் அண்ணல்
திருநீறு செம்மை திடமே

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

அத்தகு நல்ல நல்ல அவை நல்ல நல்ல
அடியார் அவர்க்கு மிகவே.

கொத்தாக விளங்கும் கூந்தலுடைய உமா தேவியுடனாகி வர, விசயனுக்குப் பாசுபதம் என்னும் அத்திரம் வழங்கும் தன்மையில் வேடுவத் திருக்கோலம் பூண்ட விகிர்தனாகிய ஈசன், ஊமத்த மலர், பிறைச்சந்திரன், நாகம் ஆகியன முடியின் மீது அணிந்து, என் உள்ளம் புகுந்தனன். அதனால், புத்தர்களையும் சமணர்களையும் வாதிட்டு அழிக்கும் அண்ணலாகிய பரமனின் திருநீறு, செம்மை மிக்கதும், திடம் கொண்டதும் ஆகி, விளங்குகின்ற அத்தகைய நல்லதாகும். அடியவர்களுக்கு அவை மிகவும் நல்லவையாகும்.

தேனமர்பொழில் கொள் ஆலை விளைசெந்நெல்துன்னி
வளர்செம்பொன் எங்கும் நிகழ
நான்முகன் ஆதியாய பிரமாபுரத்து
மறைஞான ஞான முனிவன்
தானுறு கோளு நாளும் அடியாரை வந்து
நலியாத வண்ணம் உரைசெய்
ஆனசொல் மாலை யோதும் அடியார்கள் வானில்
அரசாள்வர் ஆணை நமதே.

திருச்சிற்றம்பலம்

தேன் விளங்கும் பொழிலும், கரும் பாலையும், நெல் விளைச்சலும் வளரும் செம்பொன் பெருக, நான்முகனால் வழிபடப்பெற்ற ஆதியாகிய பிரமாபுரத்தில் விளங்கும், வேதஞானத்தில் வல்ல ஞான முனிவனாகிய திருஞானசம்பந்தர், சூரியன், சந்திரன், அங்காரகன் முதலான ஒன்பது கிரகங்களினாலும், அசுவனி முதல் ரேவதி வரையிலான இருபத்தேழு நட்சத்திரங்களாலாகிய நாளினாலும் அடியவர்கள் தீமையால் நலியாத வண்ணம் உரை செய்தனர். இத்தகைய இத் திருப்பதிகத்தை ஓதும் அடியவர்கள் வானுலகில் அரசாளும் பேறு பெறுவர். இது நமது ஆணை.



In Public domain. Digitization Muthulakshmi Research Academy

# திருஆலவாய்

தல விளக்கம்: பாண்டிய நாட்டுத் தலம். 14 தலங்களுள் 1ஆவது திருத்தலம். திருஞானசம்பந்தர், திருநாவுக்கரசர் பாடல் பெற்றது. மதுரை என வழங்கப்படுகிறது.

ஐந்து சபைகளுள் இது வெள்ளிச்சபை.

இறைவன் சௌந்தர பாண்டியனாக இருந்து ஆட்சி புரிந்த தலம். அறுபத்து நான்கு திருவிளையாடல்கள் புரிந்த தலம். மாணிக்கவாசகர் இறைவனது பெருமையைப் பாண்டிய மன்னனுக்கு உணர்த்திய திருத்தலம்.

தமிழ்ச் சங்கம் நிறுவி தமிழ் வளர்த்த தலம். மங்கையர்க்கரசியார், குலச்சிறையார் சைவம் வளர்த்த தலம். கூன்பாண்டியனின் வெப்பு நீங்கி, நின்றசீர் நெடுமாறன் ஆகிய தலம்.

இராஜசேகர பாண்டிய மன்னனுக்கு இசைய இறைவன் கால்மாறி ஆடிய திருத்தலம் இதுவே.

திருச்சிற்றம்பலம்

மந்திர மாவது நீறு வானவர் மேலது நீறு
சுந்தர மாவது நீறு துதிக்கப் படுவது நீறு
தந்திர மாவது நீறு சமயத்தில் உள்ளது நீறு
செந்துவர் வாயுமை பங்கன் திருவால வாயாந் திருநீறே.

திருநீறானது, மந்திரச் சொல் போன்று அச்சம் நீக்கி வேண்டிய நற்பயனைத் தருவது ஆகும். வானவர்கள் திருநீற்றை அணிகின்றனர். மனிதர்களுக்கு இது, வானவர்களைவிட மேலானதாகி விளங்குவது. அழகினைத் தந்து பொலியும் திருநீறு, துதிக்கப்படும் பொருளாக உள்ளது. உமையவளைப் பாகங் கொண்ட ஆலவாய் அண்ணலாகிய ஈசனின் திருநீறு இத்தகையது ஆகும்.

வேதத்தில் உள்ளது நீறு வெந்துயர் தீர்ப்பது நீறு
போதந் தருவது நீறு புன்மை தவிர்ப்பது நீறு
ஓதத் தகுவது நீறு உண்மையில் உள்ளது நீறு
சீதப் புனல்வயல்சூழ்ந்த திரு ஆலவாயான் திருநீறே.

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

வேதத்தால் சிறப்பாகப் போற்றப்படுகின்ற பெருமையுடையது திருநீறு. உலக வாழ்க்கையில், ஐம்புலன்கள் வழி ஏற்படும் பிணி முதலானவற்றால் நேரும் துன்பத்தையும், அந்தக்கரணமாகிய மனம் புத்தி சித்தம் அகங்காரம் ஆகியவற்றின் வழி நேரும் துயரங்களையும் தீர்ப்பது திருநீறு ஆகும். நல்லறிவு தருவதும், அறியாமை மற்றும் பழி முதலியவற்றால் நேரும் புன்மைகளை அகற்றுவதும் திருநீறு ஆகும். திருநீற்றின் செம்மை, ஒதத்தகுந்த பெருமையுடையதும், உண்மைப் பொருளாய் எக்காலத்திலும் நிலைத்திருக்கக்கூடியதும் ஆகும். இது திருவாலவாய் அண்ணலாக விளங்கும் ஈசனுக்கு உரிய திருநீறு.

முத்தி தருவது நீறு முனிவர் அணிவது நீறு
சத்திய மாவது நீறு தக்கோர் புகழ்வது நீறு
பத்தி தருவது நீறு பரவ இனியது நீறு
சித்தி தருவது நீறு திருவால வாயான் திருநீறே.

திருநீறு, முத்தி இன்பத்தைத் தருவது; முற்றும் துறந்த முனிவர் பெருமக்கள் அணியும் பெருமையுடையது; எக் காலத்திலும் மேலானதாக விளங்கிப் பெரும்பேறும் நலமும் இன்பமும் வழங்கும் சத்தியப் பொருளாக இருப்பது. இத்தகைய திருநீற்றை, அதன் மகிமையறிந்து, நன்குணர்ந்த சிவனடியார்கள் புகழ்ந்து பாராட்டிப் போற்றுகின்றனர். திருநீறானது மன்னுயிர்களுக்குச் சிவபக்தியைத் தருவதாகும். அதனைப் போற்றி வாழ்த்த இனிமை நல்கும். வணங்கத்தக்க இனிய பொருளாகித் தெய்வத்தன்மை கொண்டு விளங்கும் திருநீறு, எட்டுவகையான சித்திகளைத் தரவல்லது. அது ஆலவாய் அண்ணலாகிய ஈசனுக்குரிய திருநீறு ஆகும்.

காணஇனியது நீறு கவினைத் தருவது நீறு
பேணிஅணிபவர்க்கெல்லாம் பெருமை கொடுப்பது நீறு
மாணந் தகைவது நீறு மதியைத் தருவது நீறு
சேணந் தருவது நீறு திருஆல வாயான் திருநீறே.

திருநீறு அணிந்தவர்களைக் காணும் அன்பர்கள் இனிமை கொள்வார்கள். அத்தகைய பொலிவை அளிக்கவல்ல திருநீற்றை விரும்பிப் போற்றிப் புனிதமாகக் கொண்டு அணிகின்ற பெருமக்களுக்குப் பெருமை கொடுக்கும்; வல்லமை தரும்; இறப்பினைத் தடுக்கும். நல்லறிவையும் சிவஞானத் தெளிவையும் தரும் ஆற்றல் உடையது திருநீறு. மன்னுயிர்களுக்கு மேன்மையையும் உயர்வையும் தரும் ஆற்றல் உடைய இத் திருநீறு. இது ஆலவாய் அண்ணலாகிய ஈசனுடைய திருநீறே ஆகும்.

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

பூச இனியது நீறு புண்ணிய மாவது நீறு
பேச இனியது நீறு பெருந்தவத் தோர்களுக் கெல்லாம்
ஆசை கெடுப்பது நீறு அந்தம தாவது நீறு
தேசம் புகழ்வது நீறு திருஆலவாயான் திருநீறே.

திருநீறு மெய்யில் பூசி அணிய, இனிமையாக்கித் துர்க்கந்தத்தைப் போக்கும் சிறப்பும், நன்மணம் வீசும் வண்ணமும், பிணி நீக்கமும் செய்யும் புண்ணியத்தின் செயல்களால் பெரும் அத்துணைச் சிறப்பினையும் அளிக்கும். திருநீற்றின் செம்மை யாவர்க்கும் இனிமை தருவதால் புகழ்ந்து பேசும் தன்மையில் இனிமை காணும்; பெரிய தவத்தை மேற்கொண்டுள்ள சீலர்களுக்கு உறுதுணையாக, உலக பந்தத்தால் உண்டாகும் ஆசைகளை நீக்கி, உயர்ந்த நிலைக்குச் செல்ல வழி வகுக்கும். எல்லாவற்றுக்கும் முடிந்த முடிவாக – அந்தமாகத் திகழ்வது திருநீறு. தேசமெல்லாம் புகழ்ந்து போற்றும் சிறப்புடைய இத்திருநீறு, திரு ஆலவாய் அண்ணலாகிய ஈசனுக்கு உரிய திருநீறு ஆகும்.

அருத்தம தாவது நீறு அவலம் அறுப்பது நீறு
வருத்தம் தணிப்பது நீறு வானம் அளிப்பது நீறு
பொருத்தம தாவது நீறு புண்ணியர் பூசும் வெண்ணீறு
திருத்தகு மாளிகை சூழ்ந்த திருவால வாயான் திருநீறே.

பொன் போன்ற பெரிய செல்வமாக விளங்குவது திருநீறு, அவலமாகும் துன்பத்தைப் போக்குவதும், மனத்தில் வருத்திக் கொண்டிருந்து துன்புறுத்தும் நெஞ்சக் கனலைத் தணித்து விளக்குவதும், சிறப்பினை அளிப்பதும், எல்லா நிலைகளிலும் பொருந்தி விளங்கிச் சிறப்புத் தருவது திருநீறு. புண்ணியத் தன்மை கொண்டதுடன், புண்ணியம் செய்த பெருமக்கள் விரும்பிப் பூசி, மேலும் பொலிவு கொள்வதற்கும் காரணமாவது திருநீறு. செல்வம் மிக்க மாளிகைகள் சூழ்ந்த திருஆலவாயில் வீற்றிருக்கும் ஈசனார்க்கு உரிய திருநீறு, இத்தகைய சிறப்பினை உடையதாகும்.

எயிலது அட்டது நீறு இருமைக்கும் உள்ளது நீறு
பயிலப் படுவது நீறு பாக்கியமாவது நீறு
துயிலைத் தடுப்பது நீறு சுத்தமதாவது நீறு
அயிலைப் பொலிதரு சூலத்து ஆலவாயான் திருநீறே.

முப்புரத்தை எரித்துச் சாம்பலாக்கியது திருநீறு; இம்மை, மறுமை ஆகிய இரண்டினுக்கும் உயிர்களுக்குத் துணையாக இருப்பது திருநீறு நத்தியமாயும்,

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

உயர்ந்த பொருளாயும் பயின், நுகரும் பொருளாக உடையது நீறு; அது பாக்கியமாக இருந்து விளங்கும் சிறப்புடையது; மாயையின் வயப்பட்டும் சோர்வுற்றும் தடைப்படுத்தும் உறக்க உணர்வினைத் தடுத்துப் புத்துணர்ச்சி தந்து தூய்மைப்படுத்தும் இயல்புடையது. அத்தகைய திருநீறு, கூர்மையான சூலப்படையுடைய திருஆலவாய் அண்ணலாகிய ஈசனுக்கு உரிய திருநீறு ஆகும்.

இராவணன் மேலது நீறு எண்ணத் தகுவது நீறு
பராவண மாவதுநீறு பாவம் அறுப்பது நீறு
தராவணம் ஆவது நீறு தத்துவ மாவது நீறு
அராவணங் கும்திரு மேனி ஆலவா யான்திருநீறே.

இராவணன் திருநீறு அணியப் பெருமையுறச் செய்தது; எண்ணத்தால் தகுதியாக்கிப் போற்றி வழிபடுவதற்கு உரியது திருநீறு; பராபரனைப் போன்று துதிக்கப்படும் பொருளாக விளங்குவதும், பாவத்தைப் போக்குவதும் திருநீறு; தராவணமாக இருப்பது திருநீறு. அது தத்துவமாகவும் விளங்கி நிற்பது. அத்தகையது, அரவம் அணைந்து விளங்கும் திருமேனியராகிய திருஆலவாய் அண்ணலுக்கு உரியதாகிய திருநீறு ஆகும்.

மாலொடு அயனறி யாத வண்ணமும் உள்ளது நீறு
மேலுறை தேவர்கள் தங்கள் மெய்யது வெண்பொடி நீறு
ஏல உடம்பிடர் தீர்க்கும் இன்பந் தருவது நீறு
ஆலம துண்ட மிடற்றெம் ஆலவாயான் திருநீறே.

திருமாலும், பிரமனும் அறிவதற்கு அரியதாகிய வண்ணத்தை உடையது திருநீறு; விண்ணுலகத்தில் உள்ள தேவர்கள் தமது மெய்யில் பூசி மகிழ்வது திருநீறு ஆகும்; செம்மையான இத் தேகத்தில் நேரும் இடர்களான பிணி முதலான துண்பத்திலிருந்து காத்து அருள் செய்து, இன்பத்தை அவ்வப் புலன் வழி உயிருக்கு அளிக்கவல்லது இத் திருநீறு ஆகும்.

குண்டிகைக் கையர்க ளோடு சாக்கியர் கூட்டமும் கூடக்
கண்திகைப் பிப்பது நீறு கருத இனியது நீறு
எண்திசைப்பட்ட பொருளார் ஏத்தும் தகையது நீறு
அண்டத் தவர்பணிந் தேத்தும் ஆலவாயான் தீருநீறே.

சமணர்களும், சாக்கியர்களும் திகைக்கும் தகைமையில் காட்சி தருவது திருநீறு; திருநீற்றை நெஞ்சில் பதித்த போதும் இனிமையைத் தரவல்ல அத்தகைய தெய்வீகம் உடையது. எண் திசையில் உள்ள சிவமாகிய மெய்ப்

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

பொருளைச் சரணடைந்த பெருமக்களும் ஏத்தும் சிறப்புடையது திருநீறு; அத்தகையது, தேவர்கள் பணிந்து ஏத்தும் திரு ஆலவாய் அண்ணலாகிய ஈசனார்க்கு உரிய திருநீறு.

ஆற்றல் அடல்விடையேறும் ஆலாவாயான் திருநீற்றைப்
போற்றிப் புகலி நிலாவும் பூசுரன் ஞானசம் பந்தன்
தேற்றித் தென்னன் உடலுற்ற தீப்பிணி யாயின தீரச்
சாற்றிய பாடல்கள் பத்தும் வல்லவர் நல்லவர் தாமே.

திருச்சிற்றம்பலம்

வலிமைமிக்க இடப வாகனத்தில் விளங்குகின்ற ஆலவாய் அண்ணலாரின் திருநீற்றைப் போற்றித் துதித்த ஞானசம்பந்தர், மன்னவனாகிய கூன்பாண்டியனுடைய தீமையான பிணி யாவும் தீரும்வகையில் தேற்றிச் சாற்றிய இத்திருப்பதிகத்தை ஓத வல்லவர்கள் நல்லவர்களாய்த் திகழ்வார்கள்.

## மூன்றாம் திருமுறை

## திருவாவடுதுறை

தலவிளக்கம்: காவிரித் தென்கரைத் தலங்கள் 127ல் 36ஆவது திருத்தலம். மூவர் பாடல் பெற்றது. அம்பிகை பசு வடிவத்தில் ஈசனை வழிபட்ட தலம்.

சிறப்புகள்:

1. திருஞானசம்பந்தர் தமது தந்தையார் வேள்வி புரிவதற்காக ஈசனிடம் பொற்கிழி பெற்றது. இது இத்திருப்திகக் குறிப்பு.
2. சுந்தரர் தம் உடற்பிணி தீருமாறு வேண்டிய தலம்.
3. தேவர்கள் படர் அரசு ஆக விளங்க, அதன் நிழலில் ஈசன் எழுந்தருளியது.
4. திருமூலர் திருமந்திரம் அருளிச் செய்தது.
5. திருமாளிகைத் தேவர் அற்புதங்களை நிகழ்த்தியது.
6. சேரமான் பெருமாள் வழிபட்டது.
7. முசுகுந்தச் சக்கரவர்த்திக்கு மகப்பேறு அருள் செய்து, இத் திருத்தலத்தைத் திருவாரூராகவும், தம்மைத் தியாகேசராகவும் காட்டியது.
8. தரும தேவதை இறைவனை வழிபட்டு, அவருக்கு வாகனமாகும் பேறு பெற்றது.

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

திருச்சிற்றம்பலம்

இடரினும் தளரினும் எனதுறுநோய்
தொடரினும் உனகழல் தொழுதெழுவேன்
கடல்தனில் அமுதொடு கலந்தநஞ்சை
மிடறினில் அடக்கிய வேதியனே
இதுவோஎமை ஆளுமாறு ஈவதொன்றுஎமக்கு இல்லையேல்
அதுவோ உனது இன்னருள் ஆவடுதுறை அரனே.

பாற்கடலின்கண், அமுதத்தைக் கடைந்தெடுக்கும்போது தோன்றிய நஞ்சினை மிடற்றினில் அடக்கி வைத்துக் காத்தருளிய வேத நாயகனே! முனைந்து ஆற்றும் செயலில், இடையூறு தோன்றித் துன்பம் நேர்ந்தாலும்; மனம் தடுமாற்றம் கொண்டு அத்தகைய செயலை மேவுதற்குத் தளர்ச்சியுற்றாலும்; எனது தீவினைப் பயன் காரணமாக, இன்னலும் பிணியும் தொடர்ந்து வந்தாலும் நான், உன்னுடைய திருக்கழலைக் தொழுது வணங்குபவன். அவ்வாறு உள்ள தன்மையில், எம்மை ஆட்கொள்ளும் தகைமை இதுவோ! எமக்குத் தேவைப்படுகின்ற பொருளைத் தந்த அருள்புரியவில்லையானால், அது உமது திருவருளுக்கு அழகு ஆகுமா! ஆவடுதுறையில் வீற்றிருக்கும் அரனே! அருள்புரிவீராக.

வாழினும் சாவினும் வருந்தினும் போய்
வீழினும் உனகழல் விடுவேன் அல்லேன்
தாழிளந் தடம்புனல் தயங்கு சென்னிப்
போழிள மதிவைத்த புண்ணியனே
இதுவோ எமை ஆளுமாறு ஈவதொன்று எமக்கு இல்லையேல்
அதுவோ உனது இன்னருள் ஆவடுதுறை அரனே.

இம்மையில், மண்ணுலகத்தின் நன்மைகளை நுகர்ந்து மகிழ்கின்ற காலங்களிலும், மண்ணுலகத்திலிருந்து விடுபட்டுச் சாயும் தன்மையால் மடியும் காலத்திலும், தீவினைப் பயனால் வருந்தித் துன்புறும் காலத்திலும், மனம் போன போக்கில் சென்று, நற்பாதையிலிருந்து விலகிப் பாவக்குழியில் வீழ்கின்ற காலத்திலும், ஒளிமிக்க செஞ்சடையில் கங்கை திகழப் பிறைமதியைத் தரித்து விளங்கும் புண்ணியனே! நான் உன்னுடைய திருவடியைப் பற்றி இருப்பவனே அன்றி, நின்னை மறப்பவன் அல்லன். ஆவடுதுறையுள் மேவும் அரனே! எம்மை ஆட்கொண்டு விளங்கும் நீவிர் அருள்புரியும் பாங்கு தான் இதுவோ! எமக்குத் தந்தருள்வது ஒன்று இல்லையெனில், அதுவோ உனத இனிய அருள் தன்மைக்குப் பொருத்தம்

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

உடையது! உனது இனிய அருளின் தன்மையானது அடியவர்களுக்கு வேண்டியவற்றை நன்கு ஈவது அல்லவா!

நனவிலும் கனவினும் நம்பா உன்னை
மனவினும் வழிபடல் மறவேன் அம்மான்
புனல்விரி நறுங்கொன்றைப் போதணிந்த
கனல்எரி அனல்புல்கு கையவனே
இதுவோஎமை ஆளுமாறு ஈவதொன்று எமக்கு இல்லையேல்
அதுவோ உனது இன்னருள் ஆவடுதுறை அரனே.

தெளிவுரை: கங்கையும், மணம் கமழும் கொன்றை மலரும் தரித்துக் கனன்று எரியும் நெருப்பைக் கையில் கொண்டு விளங்கும் ஈசனே! ஆவடுதுறையின் அரனே! நனவின்கண்ணும், கனவின்கண்ணும் உன்னுடைய நம்பிக்கைக்கு உகந்த திருநாமத்தை மனம் ஒன்றி வணங்குவதற்கு மறந்திலேன். எனக்குத் தாய்போன்று அன்பு செலுத்தும் பெருமையுடைய ஈசனே! எமக்கு வேண்டிய பொருளைத் தராமல் இருப்பது உனது இனிய அருள் தன்மைக்குப் பொருந்துமாறு ஆகாது.

தும்மலொடு அருந்துயர் தோன்றிடினும்
அம்மலர் அடியலால் அரற்றாது என்நாக்
கைம்மல்கு வரிசிலைக் கணைஒன்றினால்மும்மதிள் எரிஎழ
முனிந்தவனே
இதுவோஎமை ஆளுமாறு ஈவதொன்று எமக்கு இல்லையேல்
அதுவோ உனது இன்னருள் ஆவடுதுறை அரனே.

மேரு மலையை வில்லாகக் கொண்டு அக்கினியைக் கணையாகத் தொடுத்துத் தீயனவாகிய முப்புரங்களை எரியுமாறு செய்த பரமனே! ஆவடுதுறையில் மேவும் அரனே! தேகத்தில் தோன்றும் பிணி வகையான தும்மல் போன்ற துயர் வந்துற்ற காலத்திலும், அவற்றின் உபாதைகளால் நலிவுற்ற போதும், சித்தம் கலங்காமல், உனது திருநாமத்தை எனது நாவானது நவிலும் தன்மையுடையது. அங்ஙனம் இருக்க, எனக்கு அருள்புரியாது வாளா இருத்தல், உனது இனிய அருள் தன்மையின் மேன்மைக்குச் சிறப்பு ஆகுமோ! எம்மை ஆட்கொள்ளும் பரிசு இத்தன்மையதோ!

கையது வீழினும் கழிவுறினும்
செய்கழல் அடியலால் சிந்தைசெய்யேன்

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

கொய்யணி நறுமலர் குலாயசென்னி
மையணி மிடறுடை மறையவனே
இதுவோஎமை ஆளுமாறு ஈவது ஒன்று எமக்கு இல்லையேல்
அதுவோ உனது இன்னருள் ஆவடு துறை அரனே.

கொய்து அணியப் பெறும் நறுமணம் கமழும் மலர்களை, மகிழ்ந்து சடைமுடியில் சூடிய நீல கண்டத்தையுடைய மறையவனே! ஆவடுதுறையில் மேவும் அரனே! கையில் உள்ள பொருள்கள் யாவும் இழந்து நைந்த காலத்திலும், பிறரால் இழிவாகக் கருதப்பட்டுக் கழிவுப் பொருளைப் போன்று குறைவுற்ற போதும், செம்மை விளங்கும் உமது திருவடியை அன்றி யான் சிந்தனை செய்ததில்லை. அங்ஙனமிருக்க, எமக்கு அருள்புரிந்து ஈவது ஒன்று இல்லை என்றால், அதுவோ உமது இனிய அருளுக்கு அழகாவது! எம்மை ஆண்டு அருள் புரிவதும் இத்தன்மைத்தோ!

வெந்துயர் தோன்றியோர் வெருவுறினும்
எந்தாய்உன் அடியலால் ஏத்தாதுஎன்நா
ஐந்தலை அரவுகொண்டு அரைக்கசைத்த
சந்தவெண் பொடியணி சங்கரனே
இதுவோஎமை ஆளுமாறு ஈவதொன்று எமக்கு இல்லையேல்
அதுவோ உனது இன்னருள் ஆவடுதுறை அரனே.

ஐந்து தலைகளையுடைய அரவத்தை அரையில் கட்டி, நறுமணம் கமழும் திருவெண்ணீற்றினைத் திருமேனியில் அணிந்து மேவும் சங்கரனே! ஆவடுதுறையில் திகழும் அரனே! கொடிய துன்பத்தால் அச்சம் கொண்டுற்றாலும், எம் தந்தையே! உன் திருப்பெயரை அன்றி என்னுடைய நாவானது வேறு ஒன்றைச் சொல்லாது. அங்ஙனம் இருக்க, எமக்கு வேண்டியவற்றைத் தந்தருளாத பாங்கு, உனது இனிய அருட்குணத்திற்கு நன்றாகுமோ! எம்மை ஆட்கொண்டு அருளும் பாங்கும் இதுவோ! அருள் புரிவீராக.

வெப்பொடு விரவியோர் வினைவரினும்
அப்பாஉன் அடியலால் அரற்றாது என்நா
ஒப்புடை ஒருவனை உருவழிய
அப்படி அழல்எழ விழித்தவனே
இதுவோஎமை ஆளுமாறு ஈவதொன்று எமக்கு இல்லையேல்
அதுவோ உனத இன்னருள் ஆவடுதுறை அரனே.

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

தனக்கு ஒப்புமையாகத் தன்னையே அன்றிப் பிறரைச் சொல்லுவதற்கு இல்லாத சிறப்புக் கொண்ட மன்மதனை, அவனுடைய வடிவமானது அழியுமாறு விழித்து நோக்கி எரித்த ஈசனே! ஆவடுதுறையில் மேவும் அரனே! அப்பா! வெம்மை கலந்து தோன்றித் தாக்குகின்ற கொடிய வினையானது பற்றித் தாக்கினாலும், உன் திருநாமத்தை அன்றி என்னுடைய நாவானது வேறொன்றைச் சொல்லாது. அங்ஙனமிருக்க, எமக்குத் தந்தருள்வது ஒன்றும் இல்லையெனில் உமது இனிய அருட்குணத்திற்கு அதுவோ இயல்பு! எம்மை ஆட்கொண்டு அருள்புரியும் பெற்றியும் இதுதானோ!

பேரிடர் பெருகிஓர் பிணிவரினும்
சீருடைக் கழல்அலால் சிந்தைசெய்யேன்
ஏருடை மணிமுடி இராவணனை
ஆரிடர் படவரை அடர்த்தவனே
இதுவோஎமை ஆளுமாறு ஈவதொன்று எமக்கு இல்லையேல்
அதுவோ உனது இன்னருள் ஆவடுதுறை அரனே.

பெருமையுடை முடிவேந்தனாகிய இராவணனைக் கயிலை மலையின்கீழ் இருந்து துன்புற்று நலியுமாறு செய்த பெருமானே! ஆவடுதுறையுள் மேவும் அரனே! தீவினையின் வயத்தால் பெருந்துன்பமும், தேகத்தின் பிணியும் முன்னுற்று வருத்தினாலும், புகழ் மிக்கதாகவும் நன்மையே வழங்குவதாகவும் உள்ள உமது திருவடியை அல்லாது வேறு எதனையும் நான் சிந்தித்தது இல்லை. அங்ஙனம் இருக்க, எமக்கு எந்த ஒன்றையும் தரவில்லையாயின் அதுவோ உமது இனிய அருட்குணத்திற்கு ஒப்பது! எம்மை ஆட்கொண்டு அருளும் பாங்கும் இதுவோ!

உண்ணினும் பசிப்பினும் உறங்கினும் நின்
ஒண்மல ரடியலால் உரையாதென்நாக்
கண்ணனும் கடிகமழ் தாமரைமேல்
அண்ணனும் அளப்பரி தாயவனே
இதுவோஎமை ஆளுமாறு ஈவதொன்று எமக்கு இல்லையேல்
அதுவோ உனது இன்னருள் ஆவடுதுறை அரனே.

திருமாலும், பிரமனும் அளப்பதற்கு அரிய ஈசனே! சுவை கொண்டு உணவு கொள்கின்ற நிலையிலும் அதன் கனவுத் தன்மையில் வயப்படாமலும், பசியின் களைப்பில் ஆழ்ந்திருப்பினும், அதன் சோர்வால் மெலியுறாதும், தன்னிலை மறந்து உறங்கும் காலத்திலும் அந்தராத்மாவை வெறுமனே

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

உறங்கச் செய்யாது ஒளிமிக்க உனது திருக்கழலை மறவாதும் தியானம் செய்பவன், நான். ஆவடுதுறையின் அரனே! எமக்கு ஈந்தருள்வது ஒன்றும் இல்லையேல் அதுவோ உனது இனிய அருட் குணத்திற்கு உரியது! எம்மை ஆட்கொண்டு அருள்கின்ற வழியும் இதுவோ!

**பித்தொடு மயங்கியோர் பிணிவரினும்**
**அத்தாஉன் னடியலால் அரற்றாதுஎன்நாப்**
**புத்தரும் சமணரும் புறன் உரைக்கப்**
**பத்தர்கட்கு அருள்செய்து பயின்றவனே**
**இதுவோ எமை ஆளுமாறு ஈவதொன்று எமக்கு இல்லையேல்**
**அதுவோ உனது இன்னருள் ஆவடுதுறை அரனே**

புத்தரும் சமணரும் புறம்பான உரைகளை நவின்றாலும், அவற்றை ஒரு பொருட்டாகக் கருதாமல் நின்னை வணங்குகின்ற பக்தர்களுக்கு வேண்டிய அனைத்தும் வழங்குகின்ற மாண்புடைய நாதனே! ஆவடுதுறையில் மேவும் அரனே! பித்தம் முதலான பிணிகளால் மயங்கும் நிலையுற்றாலும், உன்னுடைய திருநாமத்தை அல்லாது எனது நாவானது பிறவற்றைப் பேசாது. அங்கனம் இருக்க, அத்தனே! எமக்கு ஈந்தருள்வது யாதொன்றும் இல்லையேல், அதுவோ உனது இனிய அருள் குணத்திற்கு அழகாவது? எம்மை ஆட்கொள்ளும் வழியும் இதுவோ!

**அலைபுனல் ஆவடு துறை அமர்ந்த**
**இலைநுனை வேற்படை எம்இறையை**
**நலமிகு ஞானசம் பந்தன் சொன்ன**
**விலையுடை அருந்தமிழ் மாலைவல்லார்**
**வினையாயின நீங்கிப்போய் விண்ணவர் வியனுலகம்**
**நிலையாக முன்னேறுவர் நிலமிசை நிலையிலரே.**

**திருச்சிற்றம்பலம்**

அலைகள் பெருகும் நீர்வளம் பொருந்திய ஆவடுதுறையில் வீற்றிருக்கும் சூலப்படையுடைய எம் ஈசனை, உலக நலன்களை விரும்பிய ஞானசம்பந்தன் மொழிந்த பெருமையுடைய தமிழ் மாலையாகிய இத்திருப்பதிகத்தை ஓதவல்லவர்கள், வினை யாவும் நீங்கப் பெற்றவராய், விண்ணவர்தம் மேலான உலகத்தினை நோக்கிச் செல்பவர்கள் ஆவார்கள், கர்ம பூமியாகிய இம்மண்ணுலகில் மீளவும் பிறவியை அடையாது செம்மையுறுவார்கள்.

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

## பஞ்சாக்கரத் திருப்பதிகம்

பதிகக் குறிப்பு: திருஞானசம்பந்தருக்குத் தக்க பருவத்தில் உபநயனம் செய்யும் கருத்தினைக் கொண்டார் உலகியல் தந்தையாராகிய சிவபாத இருதயர். சிவஞானம் உணரப் பெற்றுப் பிறப்பினை எய்தாப் பெருமையுடைய ஆளுடைய பிள்ளையாருக்குச் சீகாழிப்பதியில் செய்யப் பெறும் உபநயனச் சடங்கில், "மறைநான்கும் தந்தோம்" என வேதியர் மொழிந்தனர். அவர்களுக்கு அஞ்செழுத்து மந்திரம் ஓதிய செம்மையானது திருப்பதிகம் ஆயிற்று.

திருச்சிற்றம்பலம்

துஞ்சலும் துஞ்சலில் லாத போழ்தினும்
நெஞ்சகம் நைந்து நினைமின் நாள்தொறும்
வஞ்சகம் அற்றுஅடி வாழ்த்த வந்தகூற்று
அஞ்சஉ தைத்தன அஞ்செ ழுத்துமே.

உறங்கும்போதும். உறங்காது விழித்திருக்கும் போதும் நெஞ்சம் கசிந்து உருகுமாறு, அஞ்செழுத்தை நினைத்துப் போற்றுக. இதனை, நாள்தோறும் புரிவீராக. மார்க்கண்டேயர், நெஞ்சில் வேறு எண்ணம் இன்றி ஈசனையே நினைத்துத் திருவடியை வாழ்த்திப் போற்றிய காலத்தில், உயிரைக் கவர வந்த கூற்றுவனை உதைத்து அழித்தது திருவைந்தெழுத்தே.

மந்திர நான்மறை யாகி வானவர்
சிந்தையுள் நின்றவர் தம்மை யாள்வன
செந்தழல் ஓம்பிய செம்மை வேதியர்க்கு
அந்தியுள் மந்திரம் அஞ்செ ழுத்துமே.

மந்திரமாக விளங்குகின்ற நான்கு வேதங்களும் ஆகி, தேவர்களின் சிந்தையில் நிலவி இருந்து அவர்களை ஆட்கொண்டு நன்னெறி பயப்பது, திருவைந்தெழுத்து ஆகும். இத்தகைய திருவைந்தெழுத்து வேள்வியை ஒம்பும் செம்மையுடைய அந்தணர் பெருமக்களின் மந்திரமாக இருந்து, காலச் சந்திகள்தோறும் ஓதப் பெற்று ஆற்ற வல்லதும் ஆகும்.

ஊனில் உயிர்ப்பை ஒடுக்கி ஒண்சுடர்
ஞான விளக்கினை ஏற்றி நன்புலத்
தேனை வழிதிறந்து ஏத்து வார்க்கிடர்
ஆன கெடுப்பன அஞ்செ ழுத்துமே.

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

இவ் அரிய தேகத்தில் உள்ள உயிர்ப்பு சக்தியை ஒருமிக்கச் செய்து, நிட்டை கூடப் பெற்று, ஞான விளக்கம் திகழச் செய்வதும், அத்தகைய நல்லறிவை நாடுபவர்களுக்குத் தோன்றும் அறியாமையாகிய இடரைக் கெடுப்பதும், திருவைந்தெழுத்தாகும்.

நல்லவர் தீயவர் எனாது நச்சினர்
செல்லல் கெடச்சிவ முத்தி காட்டுவ
கொல்ல நமன்தமர் கொண்டு போமிடத்து
அல்லல் கெடுப்பன அஞ்செ ழுத்துமே.

புண்ணியப் பெருமக்களாயினும், பாவத்தின் மேலிட்டுக் கொடுமைகள் புரியும் தீயவர்களே என்றாலும், பாகுபாடு இன்றி சிவமுத்தியைக் காட்டுவிக்கும் ஆற்றல் உடையது, திருவைந்தெழுத்து. இயமனுடைய தூதுவர்களால் உயிர் பறிக்கப்படும் காலத்திலும், அதன் துன்பத்தைத் திருவைந்தெழுத்தானது நீக்கிக் காட்டும் நெறியுடையதாகும்.

கொங்குலர் வன்மதன் வாளி யைந்தகத்து
அங்குள பூதமும் அஞ்ச ஐம்பொழில்
தங்கர வின்படம் அஞ்சும் தம்முடை
அங்கையில் ஐவிரல் அஞ்செ ழுத்துமே.

மன்மதனின் அம்பானது, தேன் துளிர்க்கும் ஐந்து மலர்களாகிய தாமரை, அசோகு, மா, முல்லை, கருங்குவளை என்பனவற்றால் ஆனவை. இவ்வுலகில் உள்ள பூதங்கள் நிலம், நீர், நெருப்பு, காற்று, ஆகாயம் என ஐந்து உடையன; பொழில்கள் அரிசந்தனம், கற்பகம், சந்தானம், பாரிசாதம், மந்தாரம் என ஐவகையுண்டு; பாம்பின் படம் ஐந்து ஆகும். ஈசனின் திருக்கரத்தில் மேவும் விரல்கள் ஐந்தாகும். திருவைந்தெழுத்து ஐந்து ஆகும்.

தும்மல் இருமல் தொடர்ந்த போழ்தினும்
வெம்மை நரகம் விளைந்த போழ்தினும்
இம்மை வினையடர்த்து எய்தும் போழ்தினும்
அம்மையி னும்துணை அஞ்செ ழுத்துமே.

தும்மலும் இருமலும் உடலின்கண் நேருங்காலத்திலும், கொடிய துயரத்தால் நைந்து வாடுங்காலத்திலும், வினையின் வயத்தால் தீமையானது அடையும் காலத்திலும், இப்பிறவியில் மட்டும் அல்லாது, மறு பிறவியிலும், நாள்தோறும் ஓதப் பெறும் திருவைந்தெழுத்தானது துணையாகி நின்று நலம் பயக்கும்.

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

வீடு பிறப்பை அறுத்து மெச்சினர்
பீடை கெடுப்பன பின்னை நாள்தொறும்
மாடு கொடுப்பன மன்னு மாநடம்
ஆடி உகப்பன அஞ்செ ழுத்துமே.

திருவைந்தெழுத்தானது, சாதலும் பிறத்தலும் நீங்கிய பேறாளர்களாக்கும் ஆற்றல் உடையது. பீடிக்கப்பெற்ற தொல் பிணியைத் தீர்த்து நாள்தோறும் நல்ல செல்வத்தை அளித்து மகிழ்விக்கச் செய்யும் திறம் கொண்டதாகிய இத்திருவைந்தெழுத்து, சிறப்பான நடம் புரிந்து மகிழும் ஈசனால் பெரிதும் உகந்து ஏற்கப்படுவதாகும்.

வண்டமர் ஓதி மடந்தை பேணின
பண்டை இராவணன் பாடி உய்ந்தன
தொண்டர்கள் கொண்டு துதித்த பின்னவர்க்கு
அண்டம் அளிப்பன அஞ்செ ழுத்துமே.

வண்டு அமரும் கூந்தலை உடைய உமா தேவியால் போற்றப்படுவதும் மற்றும் இராவணன் கசிந்துருகிப் பாடி ஈசனாரின் அருளைப் பெற்று உய்யச் செய்ததும் திருவைந்தெழுத்து ஆகும். திருத்தொண்டர்கள் இத்திருவைந்தெழுத்தினைக் கொண்டு துதிக்க, அவர்களுக்கு அண்டங்களை ஆளுகின்ற பேற்றினை ஆக்க வல்லதும் இதுவே.

கார்வணன் நான்முகன் காணு தற்கொணாச்
சீர்வணச் சேவடி செவ்வி நாள்தோறும்
பேர்வணம் பேசிப் பிதற்றும் பித்தர்கட்கு
ஆர்வணம் ஆவன அஞ்செ ழுத்துமே.

திருமாலும், பிரம்மனும் காணுதற்கு ஒண்ணாத புகழ் வண்ணமாகிய திருவடி மலர்களின் செவ்வியை, நாள்தோறும் பெருமை கொள்ளுமாறு பேசிப் போற்றுவதற்கு ஆர்வமாக விளங்குவது திருவைந்தெழுத்தாகும்.

புத்தர் சமண்கழுக் கையர் பொய்கொளாச்
சித்தத் தவர்கள் தெளிந்து தேறின
வித்தக நீறணி வார்வி னைப்பகைக்கு
அத்திரம் ஆவன அஞ்செ ழுத்துமே.

புத்தகர்களும், சமணர்களும், கூறும் பொய்யுரைகளை ஏற்காத உறுதியான சித்தம் உடையவர்கள், நன்கு தேர்ந்தும் தெளிவும் கொண்டவர்களாய்ச் சிவஞானம் தரவல்ல திருவெண்ணீறு அணியும்

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

பேறுடையவர்கள் ஆவர். அவர்களுடைய தீவினை ஆகிய பகையை மாய்க்கும் அத்திரம் என ஆவது திருவைந்தெழுத்து.

நற்றமிழ் ஞான சம்பந்தன் நான்மறை
கற்றவன் காழியர் மன்னன் உன்னிய
அற்றமில் மாலையீ ரைந்தும் அஞ்செழுத்து
உற்றன வல்லவர் உம்பர் ஆவரே.

திருச்சிற்றம்பலம்

நற்றமிழின் நாயகனாய், நான்கு மறைகளும் வல்லவனாய், காழி நகரில் மேவும் பெருமக்களின் மன்னவனாய் மேவும் ஞானசம்பந்தன், நன்குநினைத்து எத்தகைய குற்றத்தையும் நீக்கிக் காக்க வல்லதாக உரைத்த, திருவைந்தெழுத்துடைய இத்திருப்பதிகத்தை ஓத வல்லவர்கள், தேவர்கள் ஆவார்கள்.

## நமச்சிவாயத் திருப்பதிகம்

பதிகக் குறிப்பு: திருஞானசம்பந்தர், நம்பியாண்டார் நம்பி என்னும் அருந்தவத்தினரின் புதல்வியைத் திருமணம் புரிய இசைவு நல்கி, நடந்தேற, திருமணம் காண வந்தோர் அனைவருக்கும் செம்பொருள் ஓதுதலை அருளியது இத் திருப்பதிகம்.

திருச்சிற்றம்பலம்

காத லாகிக் கசிந்துகண் ணீர்மல்கி
ஓது வார்தமை நன்னெறிக்கு உய்ப்பது
வேத நான்கினும் மெய்ப்பொரு ளாவது
நாதன் நாமம் நமச்சி வாயவே.

நான்கு வேதங்களும் மெய்ப் பொருளாகத் திகழ்ந்து விளங்க, அதன்கண், சிறப்புடைய நாமமாகத் திகழ்வது நமசிவாய என்கிற ஈசனின் திருவைந்தெழுத்தாகும். இத்திருவைந்தெழுத்தை அன்பின் மேலிட்டு மனத்தில் பதித்தும், அதன்வழி, கசிந்து உருகிக் கண்ணீர் மல்கி ஓதியும் ஒழுக, நல்ல நெறியை உய்த்து அருளும் இத்தகைய சிறப்புடைய ஈசனின் திருநாமமாகிய ஐந்தெழுத்தினை ஓதுக.

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

நம்பு வார்அவர் நாவில் நவிற்றினால்
வம்பு நாள்மலர் வார்மது ஒப்பது
செம்பொ னார்தில கம்உல குக்கெலாம்
நம்பன் நாமம் நமச்சி வாயவே.

உயர்ந்ததாக விளங்கும் செம்பொன்னின் திலகம் போன்று, எல்லா உலகமும் பிரதானமாக விளங்கி மேவுவது, ஈசனின் திருநாமமாகிய நமச்சிவாய என்னும் ஐந்தெழுத்தாகும். இத் திருநாமத்தை மிகுந்த விருப்பத்துடன் ஓதுபவர்களுக்கு, அது மணம் தரும் புதுமலரில் துளிர்க்கும் தேனின் சுவைக்கு ஒப்பாகி இனிமை தரும்.

நெக்குள் ஆர்வம் மிகப்பெரு கிந்நினைந்து
அக்கு மாலைகொடு அங்கையில் எண்ணுவர்
தக்க வானவ ராத்தகு விப்பது
நக்கன் நாமம் நமச்சி வாயவே.

ஈசனின் திருநாமமாகிய நமச்சிவாய என்னும் திருவைந்தெழுத்தானது, உள்ளம் நெகிழ்ந்து உருகி ஓதப் பெறுவதாகும்; மற்றும் உருத்திராக்க மாலை கொண்டு மணிகளை உருட்டிச் செபித்து மொழியப் பெறுதலும், கையில் உள்ள விரற் கோடுகளைக் கொண்டு எண்ணி மொழியப் பெறுதலும் உடையது. இத்தகைய மாண்பில் திருவைந்தெழுத்தினை ஓதுபவர்கள், தேவர்களாகும் தகுதியைப் பெற்று விளங்குவார்கள்.

இயமன் தூதரும் அஞ்சுவர் இன்சொலால்
நயம்வந்து ஓதவல் லார்தமை நண்ணினால்
நியமம் தான்நினை வார்க்குஇனி யான்நெற்றி
நயனன் நாமம் நமச்சி வாயவே.

நெற்றியில் கண்ணுடைய ஈசனின் திருநாமமாகிய நமச்சிவாய என்னும் திருவைந்தெழுத்தை நியமத்தோடு நினைத்து ஏத்த வல்லவர்களுக்கு அப்பெருமான் இனிமையானவர். அத்தகைய செம்மை உடைய திருவைந்தெழுத்தினை ஓதும் அன்பர்கள்பால் நெருங்கி மேவும் அடியவர்களிடம், இயமனுடைய தூதுவர்களும் அஞ்சி, விலகிச் செல்வார்கள்.

கொல்வா ரேனும் குணம்பல நன்மைகள்
இல்லா ரேனும் இயம்புவர் ஆயிடின்
எல்லாத் தீங்கையும் நீங்குவர் என்பரால்
நல்லார் நாமம் நமச்சி வாயவே.

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

பாவச் செயல்களைப் புரிபவராயினும், நற்குணங்களைப் பெறாதவராகவும், நன்மைகள் ஏதும் செய்யாதவராகவும் இருந்தாலும், நன்மை விளைவிக்கும் ஈசனின் நாமமாகிய நமச்சிவாய என்னும் திருவைந்தெழுத்தை ஒதுவார்களானால், அவர்கள், எல்லாவிதமான தீமையிலிருந்தும் நீங்கப் பெற்றவர்கள் ஆவார்கள்.

மந்தரம் அன பாவங்கள் மேவிய
பந்த னையவர் தாமும் பகர்வரேல்
சிந்தும் வல்வினை செல்வமும் மல்குமால்
நந்தி நாமம் நமச்சி வாயவே.

மலை போன்ற பாவங்கள் செய்தவர்களும், பந்த பாசத்தால் பிணைக்கப் பெற்றவர்களும், ஈசனின் திருநாமமாகிய நமச்சிவாய என்னும் திருவைந்தெழுத்தைப் பகர்வார்களாயின், அவர்களுடைய கொடிய வினைகள் யாவும் நீங்கப் பெற்றுச் செல்வமும் நனி பெறுவர்.

நரகம் ஏழ்புக நாடினர் ஆயினும்
உரைசெய் வாயின ராயில் உருத்திரர்
விரவி யேபுகு வித்திடும் என்பரால்
வரதன் நாமம் நமச்சி வாயவே.

ஏழு நரகங்களில் புகுந்து ஆழும் தன்மையில் பாவங்களைப் புரிந்தாலும், வரந்தரும் ஈசனின் திருநாமமாகிய நமச்சிவாய என்னும் திருவைந்தெழுத்தை உரை செய்வாராயின், அவர்கள் உருத்திர கணத்தாரோடு சேர்ந்திருக்கும் பேற்றினைப் பெருவார்கள்.

இலங்கை மன்னன் எடுத்த அடுக்கன்மேல்
தலங்கொள் கால்விரல் சங்கரன் ஊன்றலும்
மலங்கி வாய்மொழி செய்தவன் உய்வகை
நலங்கொள் நாமம் நமச்சி வாயவே.

கயிலை மலையை எடுத்த இராவணனைத் திருப்பாத விரலால் ஊன்றி அடர்த்தவன் ஈசன். அவ்வரக்கன் உய்வதற்குக் காரணமாக இருந்தது, நமச்சிவாய என்னும் திருவைந்தெழுத்தே ஆகும்.

போதன் போதன கண்ணனும் அண்ணல்தன்
பாதந் தான்முடி நேடிய பண்பராய்
யாதும் காண்பரி தாகி அலந்தவர்
ஓது நாமம் நமச்சி வாயவே.

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

பிரமனும், திருமாலும், முறையே ஈசனின் திருமுடியையும், திருவடியையும் தேடிய பண்பினராகிக் காண முடியாத நிலையில் வருந்தி ஓதிய நாமமானது, நமச்சிவாய என்னும் திருவைந்தெழுத்தாகும்.

கஞ்சி மண்டையர் கையிலுண் கையர்கள்
வெஞ்சொல் மிண்டர் விரவலர் என்பரால்
விஞ்சை யண்டர்கள் வேண்ட அமுதுசெய்
நஞ்சுஉள் கண்டன் நமச்சி வாயவே.

சமணர்களும், சாக்கியர்களும் கொடுமையான சொற்களைக் கூற, அவற்றை ஏற்காதவராயும் தேவர்கள் வேண்டுகோளுக்கு அருள் செய்து கொடிய நஞ்சினை உட்கொண்டவரும் ஆகிய ஈசனின் திருநாமம், நமச்சிவாய என்னும் திருவைந்தெழுத்தாகும்.

நந்தி நாம நமச்சிவா யவெனும்
சந்தை யாற்றமிழ் ஞானசம் பந்தன்சொல்
சிந்தை யால்மகிழ்ந்து ஏத்தவல் லாரெலாம்
பந்த பாசம் அறுக்கவல் லார்களே.

திருச்சிற்றம்பலம்

ஈசனின் திருநாமமாகிய நமச்சிவாய என்னும் திருவைந்தெழுத்தைச் சந்தம் மிகுந்த தமிழ் கொண்டு, ஞானசம்பந்தன் அருளிச் செய்த இத்திருப் பதிகத்தைச் சிந்தை மகிழ ஏத்த வல்லவர்கள் பந்தபாசத்தை அறுக்க வல்லவர் ஆவர்.

In Public domain. Digitization Muthulakshmi Research Academy



மண்ணில் நல்ல வண்ணம் வாழலாம்; வைகலும்
எண்ணில் நல்ல கதிக்கு யாதும் ஓர் குறைவில்லைக்
கண்ணில் நல்லஃதுறும் கழுமல வளநகர்ப்
பெண்ணில் நல்லாளொடும் பெருந்தகை இருந்ததே

– திருஞானசம்பந்தர்


## AB BUILDERS

Plot No.67, 3rd Cross Street, (Mullai Street),
Sree Mookambikai Nagar, Reddiarpalayam,
Pondicherry - 605 010

## KMC ENGINEERS

81, II Cross, Sithankudi,
Pondicherry - 605 013

## JAI SARGURU DENTAL CLINIC

Natrajan Complex, Villianur Road,
Reddiarpalayam, Pondicherry - 605 010.

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

உ

சிவமயம்

சைவ சமயம் தழைத்தோங்க இறைவன் அருளால் வந்த நூல்கள் பன்னிரு திருமுறை. அவற்றுள் முதலாவதாக விளங்குவது திருஞானசம்பந்தர் தேவாரம்

ஈசன் ஆணைப்படி அம்மையால் பொற்கிண்ணத்தில் ஞானப்பால் அளிக்கப் பெற்றவர். இகவாழ்க்கையில் பிணியற்று விளங்கவும், செல்வத்தோடு விளங்கவும், ஈசன் அருள்பெற்று விளங்கவும் வழிவகுப்பது திருஞானசம்பந்தர் பாடல்கள். பாடல்கள் யாவும் தலந்தொறும் அமையபெற்றது.

ஈசனே, இத்திருப்பதிகங்கள் அடியார்கள் வாயிலாக, அருள் புரிகின்றார் என்று கொள்ளல் வேண்டும்,

இத்திருமுறை பதிகங்களை படனம் செய்து, திருஞானசம்பந்தர் ஆசியும், அண்ணாமலையான் திருவருளும் ஒருசேரப் பெற்று வாழ வணங்குகிறேன்.

Dr. ச. ரவிசங்கர், B.D.S.,